# ජනාධිපති කාර්යාලය
# சனாதிபதி அலுவலகம்
# Presidential Secretariat

# 2025

**වාර්ෂික කාර්යසාධන වාර්තාව**

**வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

Annual Performance Report

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2025

செலவினத் தலைப்பு இலக்கம் : 01



## சனாதிபதி அலுவலகம்

: 011 2354354 / 011 4354354

: 011 2340340

: ps@presidentsoffice.lk

:www.presidentsoffice.lk

: சனாதிபதி அலுவலகம், காலி முகத்திடல்,
கொழும்பு 01.

# உள்ளடக்கம்

01 அத்தியாயம் 01 - நிறுவன விவரம் ........ 1

1.1 அறிமுகம் ........ 1

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கம் ........ 2

1.3 பிரதான பணிகள் ........ 3

1.4 நிறுவனக் கட்டமைப்பு ........ 4

1.6 சனாதிபதி அலுவலகத்தின் கீழ் உள்ள நிதியங்கள் ........ 5

02 ஆம் அத்தியாயம் – 2025 முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் ........ 6

2.1 முன்னேற்றம் - 2025 ........ 6

2.2 எதிர்கால கண்ணோட்டம் ........ 6

03 ஆம் அத்தியாயம் – 2025 ஆம் ஆண்டிற்கான மொத்த நிதிசார் செயலாற்றுகை ........ 36

3.1 நிதிச் செயலாற்றுகை கூற்று ........ 36

3.2 நிதி நிலைமைக் கூற்று ........ 37

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று ........ 38

3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் ........ 39

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை ........ 40

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை ........ 40

3.7 நி.பி.208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு ........ 40

3.8 நிதி - அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ........ 43

3.9 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை ........ 44

4ஆம் அத்தியாயம் – செயலாற்றுகைச் சுட்டி (செயல்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) ........ 55

கிளீன் ஸ்ரீ லங்கா செயலகம் (Clean Sri Lanka Secretariat). ........ 112

05 ஆம் அத்தியாயம் - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை ........ 114

06 ஆம் அத்தியாயம் - மனித வள விபரம் ........ 126

6.1 பதவியணி முகாமைத்துவம் ........ 126

6.2 மனித வள பற்றாக்குறை அல்லது மிகை செயலாற்றுகை மீது தாக்கம்செலுத்தியுள்ள விதம் ........ 126

6.3 மனித வள அபிவிருத்தி ........ 126

07 ஆம் அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை ........ 135

# 01 அத்தியாயம் 01 - நிறுவன விவரம்

## 1.1 அறிமுகம்

சனாதிபதி அலுவலகம், நியதிச்சட்ட கடமைகளை நிறைவேற்றும் போது, தேசிய கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் போது மற்றும் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்லும் போது சனாதிபதிக்கு உதவும் மத்திய நிர்வாக நிறுவனமாகச் கடமையாற்றுகிறது. நிறைவேற்றுத் துறையின் மைய நிறுவனமாக, அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கிடையிலான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் பயனுள்ள ஆட்சி மற்றும் பொதுச் சேவை வழங்கலை உறுதிப்படுத்துவதில் சனாதிபதி அலுவலகம் முக்கிய பங்காற்றுகிறது.

இந்த செயல்திறன் அறிக்கை, அறிக்கையிடல் காலப்பகுதியில் சனாதிபதி அலுவலகத்தின் செயற்பாடுகள், சாதனைகள் மற்றும் செயல்பாட்டு முன்னேற்றங்கள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வையை வழங்குகிறது. மேலும், தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் பொது நிர்வாகத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு உதவுவதோடு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், புதுமை மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பையும் இவ்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

அறிக்கையிடல் காலப்பகுதி முழுவதும், இலங்கை அரசின் தொலைநோக்கும் இலக்குகளும் ஒத்திசைவாக நிர்வாக ஒருங்கிணைப்பு, கொள்கை கண்காணிப்பு மற்றும் மூலோபாயத் தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறைகளை வலுப்படுத்துவதை சனாதிபதி அலுவலகம் தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் நிறுவன செயல்திறனை மேம்படுத்துதல், டிஜிட்டல் தொழில்நுட்பப் பயன்பாட்டை ஊக்குவித்தல், மக்களுக்கான சேவைகளை வழங்கும் அரச பொறிமுறையை வலுப்படுத்துதல் மற்றும் வீண்விரயம், ஊழல் ஆகியவற்றை ஒழித்து செயல்திறன் மிக்க அரச நிர்வாக அமைப்பை நிலைநிறுத்துதல் ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், நிறைவேற்று நிர்வாக நடவடிக்கைகள் சீராக இயங்குவதை உறுதிசெய்யும் வகையில், சனாதிபதி, அரச நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கிடையிலான தொடர்பாடலை எளிதாக்கும் பொறுப்பையும் சனாதிபதி அலுவலகம் தொடர்ந்து மேற்கொண்டது. தனது கடமைகளை நிறைவேற்றும் போது, தொழில்முறைத் தன்மை, நேர்மை, ஒழுக்கம் மற்றும் சேவைச் சிறப்புத்தன்மை ஆகியவற்றின் உயர்ந்த தரநிலைகளைப் பேணுவதிலும் அலுவலகம் கவனம் செலுத்தியுள்ளது.

இந்த அறிக்கை, சனாதிபதி அலுவலகம் அடைந்துள்ள ஒட்டுமொத்த செயலாற்றுகை, சவால்கள் மற்றும் முன்னேற்றங்களை பிரதிபலிப்பதோடு, இலங்கையில் பயனுள்ள நிர்வாகம் மற்றும் தேசிய அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கான அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துகிறது.

## 1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கம்

### தொலைநோக்கு

**"வளமான நாடு - அழகான வாழ்க்கை"**

### செயற்பணி

"வினைத்திறன்மிக்க, வெளிப்படைத் தன்மையான, வகைகூறத்தக்க மற்றும் பிரசையை- மையமாகக் கொண்ட ஆளுகையை மேம்படுத்துவதில் அரசாங்கத் துறைக்கான முன்மாதிரியாக விளங்கும் அதேவேளை, சனாதிபதியின் அரசியலமைப்புசார் மற்றும் நியதிச்சட்ட தத்துவங்களை நிறைவேற்றுதல், கிராமிய வறுமை ஒழிப்புக்கான முயற்சிகளை முன்னெடுத்தல், டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குதல், மற்றும் ' கிளீன் ஸ்ரீலங்கா' நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கை எய்துதல்"

### நோக்கம்

கௌரவ சனாதிபதியின் தொலைநோக்கின்படி, நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு, மூன்று முக்கிய மூலோபாயங்களின் ஊடாக நாட்டை முன்னேற்றப் பாதையில் வழிநடத்துதல்

#### கிளீன் ஸ்ரீ லங்கா (Clean Sri Lanka)

சிறந்த மனப்பாங்குகள், நல்ல செயல்பாடுகள் மற்றும் நன்நடத்தை ஆகியவற்றின் மூலம் சிறந்த பொதுமக்களைக் கொண்ட தேசத்தை உருவாக்கும் நோக்கில், மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பொதுமக்களின் செயலூக்கமான பங்களிப்புடன் தேசிய மட்ட இயக்கமொன்றை முன்னெடுத்தல்.

#### வறுமையை ஒழித்தல் (Poverty Alleviation)

தரமான கல்வி, உணவுப் பாதுகாப்பு, வீடமைப்பு மற்றும் போதுமான வருமான மார்க்கங்களை உருவாக்குவதன் மூலம் ஒவ்வொரு பிரசையினதும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துதல், கிராமப்புற மற்றும் நகர்ப்புற வறுமையை ஒழிப்பதை அரசின் பிரதான பணியாக மாற்றுதல்.

அவ்வாறே, குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் ஊட்டச்சத்து குறைபாட்டை ஒழித்தல், தாய்மார்களின் சுகாதாரத்தையும் ஊட்டச்சத்தையும் மேம்படுத்தல், மாற்றுத்திறனாளிகள் உட்பட பொருளாதார மற்றும் சமூக ரீதியாக பின்தங்கிய மக்களை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் அனைத்து குடிமக்களினதும் நலன்களை அரசின் பொறுப்பாக உள்ளது என்பதை உறுதிப்படுத்துதல்

#### டிஜிட்டல் பொருளாதாரம் (Digital Economy)

இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய துறைகளை உலகளாவிய தரநிலைகளுக்கு உயர்த்துதல் அரசின் எதிர்பார்ப்பாகும். இதற்காக, பொதுமக்களை வலுப்படுத்தும் நோக்கில் டிஜிட்டல் பொதுக் உட்கட்டமைப்பு வசதிகளை (Digital Public Infrastructure) தாபிப்பதன் மூலம் பல்துறை டிஜிட்டல் பரிமாற்றத்தை ஏற்படுத்துதல்.

அதற்கமைய, விரைவான டிஜிட்டல் பொருளாதாரத்திற்கும் அனைத்து பொதுமக்களினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் வகையில், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பாரம்பரிய அபிவிருத்தி வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்தி, 15 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குதல்.

## 1.3 பிரதான பணிகள்

### 1. அரசியலமைப்பு ரீதியான மற்றும் நியதிச்சட்ட நிர்வாகம்

அரசியலமைப்பு மற்றும் தொடர்புடைய சட்டங்களின் பிரகாரம் அரச தலைவர் மற்றும் அரசின் தலைவராக கௌரவ சனாதிபதியின் கடமைகள் மற்றும் அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு உதவுதல்.

### 2. பொருளாதார நிர்வாகம்

தேசிய பொருளாதாரத்தை வடிவமைத்து நிர்வகித்தல், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தல் மற்றும் பொருளாதார சமநிலையின்மைகளைத் தடுக்கும் செயல்முறைகள் மற்றும் நிறுவனங்களுக்கு வசதியளித்தல்.

### 3. சமூக நிர்வாகம்

சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், பொதுமக்களின் நலனையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தவும் உருவாக்கப்பட்ட அரசின் கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் முன்முயற்சிகளுக்கு வசதியளித்தல்.

### 4. அரச துறை நிர்வாகம்

பொதுச் சேவைகளை வழங்குவதிலும் அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதிலும் அரச நிறுவனங்கள் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், செயல்திறன் மற்றும் பயன்திறனுடன் இயங்குவதற்கு தேவையான முறைமைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளுக்கு வசதியளித்தல்.

### 5. உள்ளக நிர்வாகம்

சனாதிபதி அலுவலகத்தின் செயல்முறைகள் மற்றும் கட்டமைப்புகளுக்கு வசதிகளை வழங்கி, அதன் செயற்பாட்டு முமகாமைத்துவம், பொறுப்புக்கூறல், செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பன்பாட்டு சார் நடத்தை ஆகியவற்றை உறுதிப்படுத்துதல்.

### 6. டிஜிட்டல் நிர்வாகம்

சேவை வழங்கல், பொறுப்புக்கூறல் மற்றும் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்தும் வகையில் அரச நிறுவனங்களில் டிஜிட்டல் செயற்பாடுகள் மற்றும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு வசதியளித்தல்.

### 7. இராஜதந்திர நிர்வாகம்

ஒத்துழைப்பை மேம்படுத்தவும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளவும், வெளிநாட்டு அரசுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் கௌரவ சனாதிபதி தொடர்பு கொண்டு செயல்படுவதற்கு வசதியளித்தல்.

### 8. ஊடக மற்றும் தொடர்பாடல் நிர்வாகம்

சனாதிபதியின் தகவல் தொடர்பு நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்களுடனான உறவுகளை திறம்பட வெளிப்படுத்தும் வகையில் ஊடக மற்றும் தொடர்பாடல் துறையை முகாமை செய்தல்.

## 1.4 நிறுவனக் கட்டமைப்பு



## 1.5 சனாதிபதி அலுவலகத்தின் கீழ் காணப்படும் பிரதான பிரிவுகள்

1. பணியாட்டொகுதி பிரதானி அலுவலகம்
2. சனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் அலுவலகம்
3. சனாதிபதியின் செயலாளர் பணியகம்
4. மனித வள முகாமைத்துவ பிரிவு
5. நிர்வாக பிரிவு
6. பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை அலுவல்கள் பிரிவு
7. நிர்வாக மற்றும் இராஜதந்திர உறவுகள் பிரிவு
8. வருமான நிர்வாக மறுசீரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் பிரிவு
9. அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட அலுவல்கள் பிரிவு
10. அபிவிருத்தி நிர்வாக பிரிவு
11. நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரிவு
12. கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டம்
13. *பிரஜாசக்தி* செயலகம்
14. சட்ட அலுவல்கள் பிரிவு
15. ஊழல் எதிர்ப்புக்கான விசேட பிரிவு
16. மக்கள் தொடர்புகள் பிரிவு
17. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வர்த்தகமயப்படுத்தலுக்கான தேசிய முயற்சி
18. கணக்கு மற்றும் நிதிப்பிரிவு
19. உள்ளக கணக்காய்வுப் பிரிவு
20. சனாதிபதி ஊடகப் பிரிவு

## 1.6 சனாதிபதி அலுவலகத்தின் கீழ் உள்ள நிதியங்கள்

1. சனாதிபதி நிதியம்

## 02 ஆம் அத்தியாயம் – 2025 முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

### 2.1 முன்னேற்றம் - 2025

2025 ஆம் ஆண்டில், சனாதிபதி அலுவலகத்தினால் பொது நிர்வாக வினைத்திறன், டிஜிட்டல் பரிவர்த்தனை, பொது மக்களுக்கான சேவைகளை மேம்படுத்தல் மற்றும் தேசிய அபிவிருத்திக் கொள்கைகளைச் செயற்படுத்தல் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அக்காலப் பகுதியினுள் அரசாங்கத்தின் பிரதான நோக்கங்களான தூய்மையான மற்றும் ஒழுக்கம்மிக்க சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல், ஊழலைக் குறைத்தல், அரச சேவையில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தல் மற்றும் மக்களின் தேவைகளை மையமாகக் கொண்ட ஒரு நிர்வாக முறையை நிறுவுதல் ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

மேலும், “Clean Sri Lanka”, டிஜிட்டல் பொருளாதார அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, இளைஞர்கள் மற்றும் பெண்களை வலுவூட்டல், கல்வி மற்றும் சுகாதார சேவைகளை நவீனமயமாக்குதல் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு போன்ற தேசியத் திட்டங்களை ஒருங்கிணைப்பதில் சனாதிபதி அலுவலகம் ஒரு முக்கிய பங்கினை ஆற்றியது.

இது தவிர, சனாதிபதி அலுவலகம் பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் கோரிக்கைகளுக்கு துரிதமாக பதிலளித்தல், அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை பலப்படுத்தல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புத் திட்டங்களைச் செயற்படுத்தல் ஊடாக நாட்டின் பொருளாதார மற்றும் சமூக நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கு தனது பங்களிப்பை வழங்கியது.

அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் சனாதிபதி அலுவலகம் நல்லாட்சி, நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் மக்கள் நம்பிக்கை ஆகியவற்றை பலப்படுத்தும் நோக்கிலான மறுசீரமைப்பு மற்றும் முற்போக்கான வேலைத் திட்டத்தைச் செயற்படுத்திய ஆண்டாக அறிமுகப்படுத்துவதற்கு முடியும்.

### 2.2 எதிர்கால கண்ணோட்டம்

#### 2.2.1. கிளீன் ஸ்ரீலங்கா (Clean Sri Lanka)

“ஒரு அழகான தீவு - புன்னகைக்கும் மக்கள்" என்ற எண்ணக்கருவை யதார்த்தமாக்குவதே **கிளீன் ஸ்ரீலங்கா (Clean Sri Lanka)** திட்டத்தின் நீண்டகால தொலைநோக்காகும்

இந்தத் திட்டத்தின் ஊடாக,

- கழிவு முகாமை மற்றும் மீள்சுழற்சி அமைப்புகளை பலப்படுத்தல்,
- தூய்மையான நகரங்களையும் கிராமங்களையும் உருவாக்குதல்,
- நீர், காற்று மற்றும் சுற்றுச்சூழல் மாசடைதலைக் குறைத்தல்,
- வீதி ஒழுக்கம் மற்றும் பொதுப் பொறுப்பை மேம்படுத்தல்,
- ஊழலற்ற மற்றும் வெளிப்படையான அரச சேவையை உருவாக்குதல்,
- டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை ஊக்குவித்தல்,
- இலங்கையை சுற்றுலா மற்றும் முதலீட்டிற்கு உகந்த நாடாக அபிவிருத்தி செய்தல்

போன்ற நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், நிலைபெறுதகு அபிவிருத்தி, பசுமை சக்தி, நவீன நகர அபிவிருத்தி மற்றும் காலநிலைக்கேற்ற பொருளாதாரம் ஆகியவற்றின் மூலம் இலங்கையை ஆசியாவில் ஒரு தூய்மையான மற்றும் மனங்கவர் நாடாக மாற்றுவதே இந்தத் திட்டத்தின் ஒரு முக்கிய எதிர்கால எதிர்பார்ப்பாகும்.

#### 2.2.2. வறுமை ஒழிப்பு (Poverty Alleviation)

இந்த எதிர்காலக் கண்ணோட்டத்திற்கமைய, “மக்கள் சக்தி” திட்டத்தினூடாக கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் விளிம்பு நிலையில் வாழுகின்ற மக்களுக்கு தொழிற்பயிற்சித் திட்டங்கள், சுயதொழில் வாய்ப்புகள், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்கள் அபிவிருத்தி, பெண்கள் மற்றும் இளைஞர்களை வலுவூட்டல், மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கான அணுகலை மேம்படுத்துதல் போன்ற துறைகளை ஊக்குவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், அரச மற்றும் தனியார் துறையின் ஒத்துழைப்பினூடாக சமூக மட்டத்தில் பொருளாதார

நடவடிக்கைகளை விருத்தி செய்து, வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் மற்றும் சமூக நீதியை உறுதி செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் எதிர்கால எதிர்பார்ப்பாகும்.

நீண்ட கால அடிப்படையில் நோக்கும்போது பங்களிப்பைக் கொண்ட, பொருளாதார ரீதியில் பலம்மிக்க, தன்னம்பிக்கையுடைய மற்றும் நிலைபெறுதகு வாழ்க்கை நிலைமையைக் கொண்டுள்ள இலங்கை சமூகத்தை கட்டியெழுப்புவதே “மக்கள் சக்தி” திட்டத்தின் தொலைநோக்காகும்.

### 2.2.3. டிஜிட்டல் பொருளாதாரம் (Digital Economy)

அரசாங்க சேவைகளை டிஜிட்டல்மயமாக்குவதன் ஊடாக மக்களுக்கு துரித, இலகுவான மற்றும் வெளிப்படைத்தன்மையுடனான சேவைகளை வழங்குதல் ஒரு முக்கிய நோக்கமாகும். அதற்காக e-Government முறைமைகளைப் பலப்படுத்தல், இணையத்தள வசதிகளை விரிவுபடுத்தல் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களையும் ஒரே டிஜிட்டல் வலையமைப்புடன் தொடர்புபடுத்தல்.

அத்துடன், தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையை பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு முக்கிய சக்தியாக மாற்றுவதன் மூலம் இளைஞர்களுக்கு புதிய தொழில்வாய்ப்புகளையும் வர்த்தக வாய்ப்புகளையும் உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்கை நுண்ணறிவு (AI), FinTech, Cyber Security, Data Analytics மற்றும் Software Development போன்ற புதிய தொழில்நுட்பத் துறைகளில் உள்ளூர் திறமைகளை விருத்தி செய்தல்.

மேலும், கிராமப்புறங்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதனூடாக "டிஜிட்டல் இடைவெளி"யைக் குறைத்தல், பாடசாலைகள் மற்றும் கல்வித் துறையை டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்களை டிஜிட்டல் பொருளாதாரத்துடன் இணைப்பதனூடாக சமூக மற்றும் பொருளாதார சமத்துவத்தை விருத்தி செய்தல் இந்தத் தொலைநோக்கின் மற்றொரு நோக்கமாகும்

**சனாதிபதி அலுவலகத்தின் தலைமையில் 2025 ஆம் ஆண்டில் அந்தந்தப் பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் மற்றும் 2026 ஆம் ஆண்டில் மற்றும் எதிர்கால இடைக்காலக் கட்டமைப்புடன் தொடர்புடைய முன்னுரிமைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

## ❖ சனாதிபதியின் செயலாளர் பணியகம்

### அரசாங்கத்தின் தேசிய கொள்கைகள் கட்டமைப்பைக் கண்காணித்தல்

“வளமான நாடு – அழகான வாழ்க்கை” எனும் அரசாங்கத்தின் தேசிய கொள்கை கட்டமைப்பை கண்காணிப்பதற்கான பொறுப்பு சனாதிபதயின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்ட 2025.03.03 ஆம் திகதிய 25/0389/804/046 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கிணங்க, அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் சட்டபூர்வமான நிறுவனங்களை தொடர்புபடுத்தி இந்த செயல்முறையை முறையாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### 1.1 தேசிய கொள்கைகள் கட்டமைப்பு கண்காணிப்பு திட்டமிடல் நடவடிக்கைகள்

இந்தக் கட்டமைப்புக்கிணங்க, 1,341 கொள்கை உறுதிப்பாடுகள் இனங்காணப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் உள்ளடங்கிய PS/SB/Circular/03/2025 ஆம் இலக்க சுற்றறிக்கை வரையப்பட்டு அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு சனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்டது.

சகல அமைச்சுக்களிலும் கொள்கை உறுதிப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றத்தை அறிக்கைப்படுத்துவதற்காக ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

தேசிய கொள்கைகள் கட்டமைப்புடன் தொடர்புடைய வருடாந்த செயல் திட்டம் மற்றும் மூலோபாய திட்டமிடல் படிவங்களும் தயாரிக்கப்பட்டதுடன், அதற்கிணங்க இணையவழி முறையில் திட்டமிடல்களை தயாரித்தல், காலாண்டு முன்னேற்றத்தை அறிக்கைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு குறித்த அறிவுறுத்தல்களும் விரிவான பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளன.

### 1.2 தேசிய கொள்கைகள் கட்டமைப்பு நடைமுறைப்படுத்தல் முன்னேற்றத்தை பகுப்பாய்வு செய்தல்

2025 செயல் திட்டத்திற்கிணங்க, ஒவ்வொரு அமைச்சின் விடயப் பரப்புடன் தொடர்புடைய கொள்கைகள் கட்டமைப்பின் மூன்றாவது காலாண்டின் முன்னேற்றம் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு

முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அமைச்சுக்களினதும் 2025 வருடாந்த செயல் திட்டங்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு பின்னூட்டல்கள் வழங்கப்பட்டன.

## 1.3 தேசிய கொள்கைகள் கட்டமைப்பு நடைமுறைப்படுத்தலைக் கண்காணிப்பதற்காக முதற் தடவையாக நிகழ்நிலை முறைமையொன்றை அறிமுகஞ் செய்தல்

அமைச்சுக்களின் செயலாற்றுகை கண்காணிப்பு முறைமை (Ministry Performance Monitoring System/MPMS) சனாதிபதி அலுவலகத்தினால் உள்ளக ரீதியில் திட்டமிடப்பட்டு மேம்படுத்தப்பட்ட நிகழ்நிலை முறைமையொன்று என்பதோடு, அதனூடாக அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு தேசிய கொள்கைகள் முன்னுரிமைகளுக்கமைய ஒன்றிணைந்த செயல் திட்டங்களை தயாரித்தல், முன்னேற்றத்தைக் கண்காணித்தல் மற்றும் செயலாற்றுகையை அறிக்கைப்படுத்துவதற்கான உதவி வழங்கப்படும்.

அரச நிறுவனங்களுக்கிடையில் டிஜிட்டல் சூழலொன்றை உருவாக்குவதனூடாக நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை ஊக்குவித்தல், கண்காணிப்பை பலப்படுத்தல் மற்றும் வினைத்திறன் மற்றும் பொறுப்பேற்றலை மேம்படுத்துவதற்கும் இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் காலாண்டு ரீதியிலான நிகழ்நிலை அறிக்கைப்படுத்தல் ஊடாக தேசிய ரீதியிலான முன்னுரிமைக்கமைய கருத்திட்டங்களின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றத்தை அவதானிப்பதற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகள் பயன்பாட்டை அரச நிறுவனங்களில் ஊக்குவிப்பதும் இதனூடாக மேற்கொள்ளப்படும்.

MPMS டிஜிட்டல் கண்காணிப்பு முறைமையை அறிமுகஞ் செய்தல், பயன்பாடு, அதன் பகுப்பாய்வு மற்றும் டிஜிட்டல் முகப் பலகைகள் (Digital Dashboards) வசதிகள் தொடர்பாக 2025 ஆம் ஆண்டில் 120 அலுவலர்களுக்கு 05 அமர்வுகள் மற்றும் மூலோபாயத் திட்டம் மற்றும் முறைமையின் புதிய தொழில்நுட்ப இற்றைப்படுத்தல்கள் தொடர்பாக 120 அலுவலர்களுக்கு 05 அமர்வுகள் நடாத்தப்பட்டன.

2026.01.01 முதல் 2026.05.15 ஆம் திகதி வரை முறைமையின் புதிய தொழில்நுட்ப இற்றைப்படுத்தல்கள் தொடர்பாக மற்றும் முன்னேற்ற அறிக்கைப்படுத்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்காக நிகழ்நிலை முறை ஊடாக 25 அமைச்சுக்களுக்காக 25 அறிவுறுத்தல் அமர்வுகள் நடாத்தப்பட்டதுடன், செயல் திட்டத்தை தயாரித்தல் தொடர்பாக அமைச்சுக்களின் உள்ளகப் பிரிவுகள் மற்றும் அமைச்சுக்களின் கீழ் நிலவுகின்ற நிறுவனங்களின் அலுவலர்களை அறிவுறுத்துவதற்கு முடியுமான வகையில் 25 அமைச்சுக்களின் தொடர்புடைய அலுவலர்களை பயிற்றுவிப்பதற்காக 02 பயிற்சிப் பட்டறைகள் (TOT) மூலம் 70 அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

## அரச துறையில் நேர்மையை ஊக்குவித்தல்

அரச துறை மீது பொது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்குப் போன்றே அரச நிறுவனங்களில் வினைத்திறன் மற்றும் நம்பகத் தன்மையை விருத்தி செய்வதற்கு அரச துறையில் ஊழல்களைத் தடுத்தல் மற்றும் நேர்மையைப் பலப்படுத்துவதற்காக முறையான நிறுவனமயப்படுத்தப்பட்ட முறையொன்று அத்தியாவசியமாகும். அதற்கிணங்க உள்ளக அலுவல்கள் பிரிவுகளை (Internal Affairs Unit - IAU) தாபித்தல் 2025–2029 தேசிய ஊழல் எதிர்ப்பு செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான விடயமாக இருப்பதுடன், சனாதிபதி அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையொன்றின் ஊடாக இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

## 2.1 உள்ளக அலுவல்கள் பிரிவுகளை (IAUs) தாபித்தல்

அரச துறையில் இலஞ்சம், ஊழல் மற்றும் முறைகேடுகளை தடுத்தல் மற்றும் அரச அலுவலர்களின் நேர்மையாகப் பணியாற்றும் தன்மையை ஊக்குவிப்பதற்காக அரச நிறுவனங்களில் உள்ளக அலுவல்கள் பிரிவுகளை தாபிக்கும் திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டம் 2025 ஆம் ஆண்டில் வழிநடாத்தப்பட்டது.

உள்ளக அலுவல்கள் பிரிவுகளை தாபித்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பாக சனாதிபதியின் செயலாளரது இலக்கம்: PS/SB/Circular/2/2025 மற்றும் 2025.02.18 ஆம் திகதிய விபரமான சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. மேலும், இரண்டாம் கட்டத்தின் கீழ் உள்ளக அலுவல்கள் பிரிவுகளை தாபிப்பதற்காக சனாதிபதியின் செயலாளரது இலக்கம்: PS/SB/Circular Letter/01/2025 மற்றும் 2025.11.12 ஆம் திகதிய சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டது.

அதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில் முதலாம் கட்டத்தின் கீழ் அனைத்து நிரல் அமைச்சுக்கள், பிரதம

செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் உள்ளிட்ட 117 நிறுவனங்களிலும், இரண்டாம் கட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டில் 36 நிறுவனங்களிலும்இ 2026.01.01 முதல் 2026.05.15 வரை 206 நிறுவனங்களிலும் உள்ளக அலுவல்கள் பிரிவுகள் தாபிக்கப்பட்டன.

ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த முறையான புரிதலை வழங்கும் நோக்கில், சனாதிபதி அலுவலகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுடன் இணைந்து, முதலாம் கட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டில் 83 உள்ளக அலுவல்கள் பிரிவுகளைச் சேர்ந்த 412 அலுவலர்களுக்காக 8 இரண்டு நாள் பயிற்சிப் பட்டறைகளும், 2026.01.01 முதல் 2026.05.15 வரை 26 உள்ளக அலுவல்கள் பிரிவுகளைச் சேர்ந்த 121 அலுவலர்களுக்காக 2 பயிற்சிப் பட்டறைகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. இரண்டாம் கட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டில் 36 உள்ளக அலுவல்கள் பிரிவுகளைச் சேர்ந்த 144 அலுவலர்களுக்காக ஒரு இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையும், 2026.01.01 முதல் 2026.05.15 வரை 124 உள்ளக அலுவல்கள் பிரிவுகளைச் சேர்ந்த 496 அலுவலர்களுக்காக 5 பயிற்சிப் பட்டறைகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

IAU நிகழ்நிலைத் தளம் பயன்பாடு பற்றிய முதலாம் கட்டத்தின் கீழ் 107 உள்ளக அலுவல்கள் பிரிவுகளைச் சேர்ந்த 214 அலுவலர்களுக்காக 2025 ஆம் ஆண்டில் 5 பயிற்சிப் பட்டறைகளும், 2026.01.01 முதல் 2026.05.15 வரை இரண்டாம் கட்டத்தின் கீழ் 109 உள்ளக அலுவல்கள் பிரிவுகளைச் சேர்ந்த 218 அலுவலர்களுக்காக 4 பயிற்சிப் பட்டறைகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

## IAU Monitor ஊடாக IAU அலுவல்களை டிஜிட்டல் மயப்படுத்தல்

"IAU Monitor" என்பது சனாதிபதி அலுவலகத்தினால் உள்ளக அலுவல்கள் பிரிவுகளுக்காக உள்ளக ரீதியில் திட்டமிடப்பட்டு மேம்படுத்தப்பட்ட நிகழ்நிலைத் தளமாகும். இந்தத் தளத்தினூடாக அரச துறையில் தாபிக்கப்பட்டுள்ள அனைத்து உள்ளக அலுவல்கள் பிரிவுகளுக்கு கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் முகாமைத்துவம், கூட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல், பயிற்சி முகாமைத்துவம், செயல் திட்டம் பற்றிய அறிக்கைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு மற்றும் தரவுப் பகுப்பாய்வு உள்ளிட்ட பல்வேறு அலுவல்களை சுயாதீனமாக முகாமைப்படுத்துவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

அத்துடன், உள்ளக அலுவல்கள் பிரிவுகளுடன் தொடர்புடைய ஊழல் ஆபத்துக்களை மதிப்பீடு செய்தல் (Corruption Risk Assessment-CRA), நிறுவனம்சார் நேர்மை தொடர்பான செயல் திட்டம் (Institutional Integrity Action Plan-IIAP) மற்றும் நெறிமுறைகள் கோவையை தயாரிக்கும் பணிக்கு உதவி வழங்கப்பட்டது. 2026.05.15 ஆம் திகதி வரை சனாதிபதி அலுவலகத்தினால் 100 நிறுவனங்களுக்கு CRA மற்றும் IIAP மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு பின்னூட்டல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், நெறிமுறைகள் கோவை தொடர்பாக 40 நிறுவனங்களுக்கும் பின்னூட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது.

## அரசாங்கத்தின் மூலதன செலவுகள் கண்காணிப்புக்காக நிகழ்நிலை முறைமையொன்றை அறிமுகஞ் செய்தல்

அரசாங்கத்தின் மூலதனச் செலவினங்களின் நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக நிகழ்நிலை முறைமையொன்று மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த முறைமை ஊடாக பொதுத் திறைசேரியினால் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி உரிய திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கு வினைத்திறனுடன், பயன்மிக்க வகையில் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படும்.

## ❖ கிளீன் ஸ்ரீலங்கா திட்டம்

- ❖ கிளீன் ஸ்ரீ லங்கா (Clean Sri Lanka) திட்டம், இலங்கை சமூகத்தை சுற்றுச்சூழல், சமூக மற்றும் பண்பாட்டு ரீதியிலான மறுமலர்ச்சியை நோக்கி வழிநடாத்துவதனை நோக்கமாகக் கொண்ட விசேட தேசிய திட்டமொன்றாகும். "வளமான நாடு – அழகான வாழ்க்கை" எனும் (A Thriving Nation, A Beautiful Life) எனும் தூர நோக்கினை முன்னிறுத்தி, 2024 டிசம்பர் 19 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இந்தத் திட்டத்தை திட்டமிடுவதற்கு மற்றும் செயற்படுத்துவதற்கு சனாதிபதி செயலணியொன்று அமைக்கப்பட்டது.
- ❖ இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம், வெறுமனே சுற்றுச் சூழலை சுத்தப்படுத்தல் மாத்திரமன்றி, முன்மாதிரி, வழிகாட்டல் மற்றும் உரிய அழுத்தம் ஊடாக சமூகத்தில் சாதகமான பண்பாட்டு ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். அதற்கிணங்க கிளீன் ஸ்ரீலங்கா திட்டமானது சுற்றுச்சூழல், சமூக மற்றும் பண்பாடு எனும் 03 தூண்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.
- ❖ இந்தத் திட்டத்திற்காக அரச மற்றும் தனியார் துறைகளின் ஒத்துழைப்பைப் போன்றே சிவில் சமூகத்தினதும் தன்னார்வ ஊழியர்களினதும் பங்களிப்பை பயன்படுத்தி நான்கு வருடங்களுக்குள்

இந்த நாட்டில் உயர் சமூக மாற்றமொன்றை ஏற்படுத்துவதே இதன் பிரதான இலக்காகும்.

## அரசாங்கத்தின் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திய அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் ஆரம்பிக்கப்பட்ட கொள்கைகள்

1. மகாவலி கங்கையின் மேல் நீரேந்து பகுதிகளில் கிடங்குகள் மற்றும் இயற்கைப் பாறைக் கரைகளை அமைத்துஇ தேர்ந்தெடுக்கப்பட்ட காணிகளை அபிவிருத்தி செய்தல்
2. மேல் மகாவலி வலயத்தில் கழிவு முகாமைத்துவத் திட்டங்களை ஏற்பாடு செய்தல்
3. பொலன்னறுவைஇ வெலிகந்தைஇ நெலும்வெவ ஆகிய இடங்களில் வெந்நீர் ஊற்றுகளை அமைத்தல் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த சுற்றுலாத் துறையை ஊக்குவித்தல்
4. களனி கங்கையின் நீரேந்து பகுதி முகாமைத்துவத்திற்கான விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளல்
5. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதான குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் உள்ள ஒதுக்குகளைப் பாதுகாத்தல்
6. தலல்ல, நீலக்கொடித் (Blue Flag) திட்டங்கள்
7. திருகோணமலை சுத்தமான கடற்கரைத் திட்டங்கள்
8. கடலோரப் பகுதியில் உயர் பல்வகைமை பாதுகாப்பு வலயங்கள் மற்றும் கடலோரப் பூங்காக்களை உருவாக்குதல்
9. ஹாலிஎல சுற்றுச்சூழல் முறைமையின் நீர் மூலங்களை மேம்படுத்துதல்
10. கண்ணாடியிழை (fiber glass) மீள்சுழற்சித் திட்டங்கள்
11. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் பொருள் மீட்பு வசதிகளை (MRF) மேம்படுத்துதல்
12. திண்மக் கழிவுகளை முறையாகச் சேகரித்தல் மற்றும் போக்குவரத்திற்காக கழிவு அமுக்கிகளை கொள்வனவு செய்து விநியோகித்தல்
13. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் சாக்கடை கழிவுகள் சுத்திகரிப்பு முறைமைகளை நிர்hணித்தல்
14. கொன்க்ரீட் மற்றும் கட்டுமானப் பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்கான ஒரு செயலாக்க நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல்
15. கொழும்புப் பகுதியில் உள்ள கால்வாய்கள் மற்றும் உரிமையற்ற கால்வாய்களின் பராமரிப்பு
16. கொழும்பு புனித செபஸ்டியன் கால்வாய் அமைப்பின் நீரின் தரத்தை இயல்பு நிலைக்கு மீட்டெடுப்பதற்கான முகாமைத்துவத் திட்டமொன்றைத் தயாரித்தல்
17. சர்ப்பன்டைன் கால்வாய், மஹவத்த கால்வாய் மற்றும் தெமட்டகொட கால்வாய் ஆகியவற்றிற்கான திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்தல்
18. கரதியானப் பகுதியில் உக்காத கழிவுகளைச் சேகரித்து மீள்சுழற்சி செய்யும் நிலையத்தை மேம்படுத்தல்
19. கரதியானப்; பகுதியில் திண்மக் கழிவுகளைப் பயன்படுத்தி சேதனப்; பசளை தயாரிக்கும் நிலையமொன்றை நிர்மாணித்தல்.
20. நடமாடும் CCTV அமைப்பு மூலம் கண்காணித்து அனுமதியின்றிய கழிவு அகற்றுதலைக் குறைத்தல்
21. நீதிமன்ற அமைப்பில் வழக்குகள் முகாமை மற்றும் டிஜிட்டல்மயமாக்குதல் - “இ-நீதிமன்றங்கள்" - "e-courts"
22. மதவாச்சி சேதனப்; பசளை தயாரிக்கும் நிலையம்.
23. சுத்தமான நில்வலா திட்டம்
24. “சமனல சிரி – பசுமை யாத்திரை" ஸ்ரீ பாத யாத்திரை திட்டம்
25. புத்தளம் வனவிலங்குகள் செறிவூட்டல் வலயங்கள்
26. பூச்சிகளை மலடாக்கல் தொழில்நுட்பத்தைப் (SIT) பயன்படுத்தி டெங்கு ஒழிப்பை பலப்படுத்துதல்
27. சிங்கராஜ மற்றும் கன்னெலிய பாதுகாக்கப்பட்ட வனங்களுக்குள் பிரவேசிப்பதற்கு விசேட தேவையுடைய பார்வையாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்
28. வரலாற்றுப் புகழ்மிக்க மற்றும் சுற்றுலா நகரங்களை மெய்நிகராக (Virtual) அனுபவிப்பதற்கான டிஜிட்டல் அணுகுமுறை
29. "ஆரோக்கியமான தேசத்திற்காக பாதுகாப்பான உணவு" - பன்முக விழிப்புணர்வுத் திட்டம்
30. வீதிப் பாதுகாப்பு குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான விரிவான ஊடகப் பிரச்சாரம் (Take Care திட்டம்)
31. உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் பொது மலசலகூடங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல்
32. வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து முகாமைத்துவத்திற்காக ஒரு தொழில்நுட்ப அமைப்பை

(CCTV) உருவாக்குதல்
33. விசேட தேவையுடைய நபர்களுக்காக வசதிகளுடன்கூடிய பேருந்துகளை ஈடுபடுத்துவதற்கான முன்னோடித் திட்டம்
34. மத்திய பேருந்து நிலையத்தை நவீனமயப்படுத்தல்
35. தீவு முழுவதும் நகர்ப்புறங்களில் மலசலகூட அலகுகளை நிர்மாணித்தல்
36. கிளீன் ஸ்ரீலங்கா மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் மாநாட்டு ஊடக வழிநடாத்தல்
37. உலக வாழ்விடங்கள் தினம் 2025
38. பிரவேச வாயில்களுக்கு அருகில் உற்பத்தி விற்பனைக் கூடங்களை நிர்மாணித்தல் (கொஸ் கம்மானய)
39. காலநிலை சார்ந்த செயற்பாடுகள் மற்றும் அனர்த்தத் தடுப்பு தொடர்பான 2025 ABU ஊடக மாநாடு
40. கிளீன் ஸ்ரீலங்கா "உள நல மேம்பாடு" தேசிய மட்டத்திலான TOT திட்டம்
41. "இதயத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு" திட்டம் அல்லது நடமாடும் சேவை திட்டம்
42. தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பாடசாலைகளில் பசுமை வலயங்களை அபிவிருத்தி செய்தல்
43. மாகாணப் பாடசாலைகளின் சேதமடைந்துள்ள கட்டிடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல்
44. மாகாணப் பாடசாலைகளின் உடலாரோக்கிய வசதிகளை மேம்படுத்துதல்
45. மனப்பாங்கு ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் பாடசாலை சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டல் (Next gen leaders)
46. தொழில்நுட்பக் கல்லூரிகளைப் புனரமைத்தல்
47. சுற்றுலாத் துறையில் வசதி வழங்குநர்கள் மற்றும் சாரதிகளுக்கான விழிப்புணர்வுத் திட்டங்கள்
48. மாதிரி சமூகக் கிராமங்கள் மூலம் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகளை நடாத்துதல்
49. 2025/2026 தேசிய உற்பத்தித்திறன் விருதுகள்
50. போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களின் வசதிகளை விரிவுபடுத்துதல்
51. 2025 உலக சிறுவர் தின தேசிய நிகழ்ச்சித் திட்டம்
52. அரசாங்க அதிகாரிகளுக்கு விழிப்புணர்வூட்டும் TOT திட்டம் - கேகாலை
53. 2025 முதல் புத்தகம் - ஊவா மாகாண சபை
54. “ஊவா நவோதய" கலாச்சார மற்றும் கலை வாரம்
55. Art of living - அரசாங்க அதிகாரிகளுக்கு விழிப்புணர்வூட்டும் TOT திட்டம்
56. மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 10 நடமாடும் நூலகங்களை வழங்குதல்
57. சப்ரகமுவ மாகாண கலை விழா
58. கிளீன் ஸ்ரீலங்கா நடமாடும் சேவைகள் விசேட பொது மக்கள் உபசரணை சேவை
59. போதைப்பொருள் ஒழிப்புக்கான "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத் திட்டம்
60. புனித தாது வழிபாடு யாத்திரையுடன் இணையாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வசதிகளை வழங்குதல்; மற்றும்
61. கண்டி நகரை சுத்தம் செய்யும் சிரமதான நிகழ்ச்சித் திட்டத்திற்கான உபகரணங்கள் கொள்வனவு செலவுகளை மீள் நிரப்புதல்.
62. 2025 ஆம் ஆண்டின்இயலாமையுடையோருக்கான சர்வதேச தினத்தை நினைவுகூரும் தேசிய திட்டம்
63. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் வெளிக் கள அலுவலர்களுக்கான விழிப்புணர்வூட்டல் திட்டம்
64. அரச நிறுவனங்களில் உள்ளக அலுவல்கள் பிரிவுகளைத் தாபிப்பதற்கான திட்டம்

## தனியார், அரச, பொது மக்கள் கூட்டாண்மைத் திட்டங்கள்

1. “Dream Destination - கனவுப் பயண முடிவிடம்” - தனியார் துறையின் நிதிப் பங்களிப்பு மற்றும் பிரஜைகளின் பங்கேற்புடன் 100 புகையிரத நிலையங்களை நவீனமயப்படுத்தல் திட்டம்

2. “Urban Forests - நகர்ப்புறக் காடுகள்” - தனியார் துறை மற்றும் பிரஜைகளின் ஒத்துழைப்புடன் நகர்ப்புறங்களில் காடு வளர்ப்பை மேற்கொள்ளல்.

3. “Clean Mind - தெளிவான உள்ளம்” - தொழிற்பயிற்சி நிறுவனங்கள், தாதியர் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் உள்ளிட்ட நிறுவனங்களில் இளைஞர்களிடையே நல்ல மனநிலையை ஏற்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

4. “Seabed Cleaning & Development of Coral reefs - கடலடியை சுத்தப்படுத்தல் மற்றும்

பவளப்பாறைகளின் மேம்பாடு" - திருகோணமலைப் பகுதியை மையமாகக் கொண்டு கடலடியில் இருந்து கழிவுகளை அகற்றுதல் மற்றும் பவளப்பாறைகளை மேம்படுத்துதல்.

5. "Beautiful Beach - an attractive tourism destination - "அழகான கடற்கரை – மனங்கவர் சுற்றுலாப் பயணத்தின் முடிவிடம் " - தீவைச் சுற்றி கழிவுகளற்ற ஒரு அழகான கடற்கரைப் பகுதியை உருவாக்கி அதன் சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பை மேம்படுத்துவதற்காக தனியார் துறை மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்படும் ஒரு திட்டம்.

6. "CLEAN SRI LANKA Cycling Rally - 2025 - கிளீன் ஸ்ரீலங்கா மிதிவண்டிப் பேரணி - 2025" - கிளீன் ஸ்ரீலங்கா எண்ணக்கருவை சமூகத்தினரிடையே பிரபலப்படுத்துவதற்காக பொது மக்கள் மற்றும் தனியார் துறையின் பங்கேற்புடன் நடாத்தப்படும் ஒரு மிதிவண்டிப் பேரணி.

7. "Catalyzing actions to close the plastic loop - PLEASE project - பிளாஸ்டிக் வளையத்தை மூடுவதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகள் - ப்ளீஸ் திட்டம்" - கொழும்பைச் சுற்றியுள்ள கால்வாய்களில் சேருகின்ற பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் ஒரு திட்டம்.

8. Enrichment of wild elephants zones for foods - காட்டு யானைகளுக்கான உணவு வலயங்களை உருவாக்குதல் - கலாவெவ மற்றும் தப்போவ குளங்களை அண்டிய பகுதிகளில் காட்டு யானைகளின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உணவு வலயங்களை உருவாக்குதல்.

### பிரதான துறைகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட முக்கிய பெறுபேறுகள்:

- கொழும்பு மத்திய பேருந்து நிலையத்தை நவீனமயமப்படுத்தல்: 2025 ஆம் ஆண்டிற்கான அதன் இலக்குகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இது 2026 ஏப்ரல் 08 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இத்திட்டத்தினூடாக பயணிகளுக்கான ஒரு முறையான, பாதுகாப்பான, மக்கள் நேச பேருந்து நிலையம் உருவாகியுள்ளது. அத்துடன் இத்திட்டத்தை ஒரு பொதுவான முன்மாதிரியாகவும் அடையாளம் காணலாம்.
- விசேட தேவையுடைய நபர்களுக்கான போக்குவரத்து வசதிகள்: இயலாமையுடைய பிரஜைகளுக்கு வசதிகளைக் கொண்ட அடிப்பகுதி மிகவும் கீழே காணப்படுகின்ற 10 நவீன குளிரூட்டப்பட்ட பேருந்துகள் கொண்டுவரப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளான, முன்மாதிரியான போக்குவரத்து மாதிரியை உருவாக்குதல், பேருந்துப் பயணிகளுக்கு வசதியான சேவையை வழங்குதல் மற்றும் இயலாமையுடைய பிரஜைகளுக்கு தரமான சேவையை வழங்குதல் ஆகியன நிறைவேற்றப்பட்டுள்ளன.
- கால்வாய்கள் பராமரிப்பு: கொழும்புப் பகுதியில் எந்தவொரு நிறுவனத்தாலும் பராமரிக்கப்படாமல் நகரத்திற்கும் அதன் புறநகர்ப் பகுதிகளுக்கும் சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தலாக இருந்த கால்வாய்களைப் பராமரிக்கின்ற 2025 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அதனூடாக ஒரு தூய்மையான சுற்றுச் சூழலையும், நீர்நிலைகளில் கழிவுகளைக் கொட்டும் முறையற்ற பழக்கங்களுக்குப் பதிலாக, சிறப்பான நடத்தை மாற்றத்தையும் உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.
- புனித பாத தரிசன யாத்திரை : "சமனல சிரி – பசுமை யாத்திரை" யாத்திரை திட்டத்தினூடாக 2025 ஆம் ஆண்டுக்கான சுற்றுச்சூழலை சுத்தப்படுத்துகின்ற மற்றும் வசதிகளை வழங்கும் இலக்குகள் அடையப்பட்டுள்ளதுடன், இதனூடாக, இது, ஸ்ரீ பாத பாதுகாக்கப்பட்ட ஒதுக்கினை சுற்றியுள்ள தனித்துவமான சுசுற்றுச்சூழல் வலயத்தைப் பாதுகாத்தவாறு மேற்கொள்ளப்படும் ஒரு புனித யாத்திரை"க்காக பக்தர்களிடத்தில் மனப்பாங்கு ரீதியிலான மாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் பிரதான இலக்கான சூழல் நேய புனித பாத வழிபாட்டு யாத்திரை திட்டம் தொடர்ந்தும் செயற்படுத்தப்படுவதாகும்.
- சுத்தமான கடற்கரைக்கான திட்டங்கள்: கடற்கரைப் பூங்காத் திட்டம், திருகோணமலை சுத்தமான கடற்கரைத் திட்டம் மற்றும் தலல்ல "Blue Flag" கடற்கரைத் திட்டம் போன்றவை ஊடாக கடற்கரைச் சுற்றுலாப் பயணிகளுக்காக உணர்திறன் மிக்க அந்த சுற்றுச்சூழலைப் பாதுகாத்தவாறு தமது சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குதலைப் போன்றே மனப்பாங்கை விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான ஊடகச் செயற்பாடுகள்: "ஆரோக்கியமான தேசத்திற்காக பாதுகாப்பான உணவு" மற்றும் "Take Care" ஆகிய வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வுத் திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதுடன், மேலும், இது அத்துறைகளில் நல்ல மனப்பான்மையையும் பழக்கவழக்கங்களையும் ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- நடமாடும் நூலகங்கள்: மேல் மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி நிறுவனகளுக்கு வாகனங்களுடன் கூடிய 10 நடமாடும் நூலகங்களை வழங்கும் பணி நிறைவடைந்துள்ளது. இது பொதுமக்களிடையே புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை வளர்த்து, நல்லெண்ண மனப்பான்மை கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- ஒரு கனவுப் பயண முடிவிடம் எனும் கருப்பொருளின் கீழ் தனியார் துறை முதலீடுகள்: இதன் ஆரம்பத் திட்டம் 100 ரயில் நிலையங்களாகும். இவற்றில், காலி மாவட்டத்தில் உள்ள தல்பே ரயில் நிலையம் மனங்கவர் விதத்தில் நவீனமயமாக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்துவைக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 10 ரயில் நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 48 பிரதான குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் ஒதுக்குகளைப் பாதுகாப்பதற்காக 2025 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதுடன், இத்திட்டத்தினூடாக குளங்களின் ஒதுக்குகளின் எல்லைகளைத் தெளிவாக அடையாளமிடுவதன் மூலம் நீர் மூலங்களின் நிலைபெறுதகுதன்மையைப் பாதுகாத்தல், அனுமதியற்ற காணி கையகப்படுத்துதலைத் தடுத்தல் மற்றும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

## எதிர்கொள்ள வேண்டியேற்பட்ட சவால்கள்

- வெளிப்புறக் காரணிகள் மற்றும் புவியியல் தடைகள்: சுற்றுச்சூழல் தூணின் கீழ் உள்ள சில கருத்திட்டங்கள் மோசமான “டிட்வா” காலநிலை நிலைமை காரணமாக, வெளிக் கள மட்டத்தில் செயல்படுத்த முடியவில்லை.
- பெறுகை செயல்முறை தாமதங்கள்: சில கருத்திட்டங்களுக்குத் தேவையான சிறப்புத் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும்போது சர்வதேச மற்றும் உள்ளூர் பெறுகை வழிகாட்டிகளுக்கமைய ஏற்பட்ட தாமதங்கள்.
- நிறுவனம்சார் ஒருங்கிணைப்புச் சிக்கல்கள்: தொடர்புடைய கருத்திட்டங்கள் சில அரச நிறுவனங்களின் கூட்டுப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டமையினால் நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பின்போது ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அதிக காலம் எடுத்தமை.
- நடத்தை ரீதியிலான மாற்றங்களுக்குத் தேவைப்படும் காலம்: நெறிமுறைகள் மற்றும் சமூகத் தூண்களின் கீழான பெரும்பாலான கருத்திட்டங்கள் பொதுமக்களின் மனப்பாங்கில் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், அவற்றின் பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்த்த காலத்தை விடவும் அதிக காலம் தேவைப்படல்.

## 2026 ஆம் ஆண்டில் மற்றும் எதிர்கால இடைக்கால கட்டமைப்புடன் தொடர்புடைய முன்னுரிமைகள்

அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்பு மற்றும் வர்த்தமானி அறிவிப்பின் அடிப்படையில், 2026 ஆம் ஆண்டிற்காகப் பின்வரும் முக்கியப் துறைகள் முன்மொழியப்பட்டுள்ளன:

### சமூகத் தூண் - முன்னுரிமைத் துறைகள்

i. பொது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்தல் (போக்குவரத்து நிலையங்கள், போக்குவரத்து சேவைகள், உடலாரோக்கிய வசதிகள், பொது இடங்கள்)
ii. iஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் மற்றும் உள நலத்தை மேம்படுத்தல் (விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகள், உளவள ஆலோசனை நிகழ்ச்சிகள்)
iii. பிரஜைகள் பங்கேற்பு மற்றும் தன்னார்வ சேவையை பலப்படுத்தல்

### சுற்றுச்சூழல் தூண் - முன்னுரிமைத் துறைகள்

i. ஒன்றிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவ அமைப்புகள் - ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் சார்ந்த உந்துதலுடன் பொது மக்களின் புரிதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்காக, நாடளாவிய ரீதியில் ஒரு பாரிய கழிவு முகாமைத்துவத் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான திட்டத்தை தயாரிப்பதனை வினைத்திறனுடன் மேற்கொண்டு வருவதுடன், ஆண்டின் மீதிக் காலப் பகுதியினுள் செயற்படுத்தப்படும்.
ii. மீள் காடு வளர்ப்பு மற்றும் உயர் பல்வகைமை பாதுகாப்பு
iii. சுழற்சிப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்
iv. பசுமை நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி – நாட்டின் சில நகரங்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு நகரத்தையும் ஒரு மாதிரி நகரமாக அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2027 ஆம் ஆ;ணடில் இத்திட்டத்தின் செயலாக்கம் ஆரம்பிக்கப்படும்.

### நெறிமுறைகள் - முன்னுரிமைத் துறைகள்

i. ஊழலுக்கு எதிரான முயற்சிகள் மற்றும் ஊழலுக்கு எந்தவொரு வாய்ப்பு ஃ இடமளிக்காத

அமைப்புகள் (zero tolerance systems)

ii. அரச துறையில் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையை பலப்படுத்துதல்

iii. நெறிமுறை சார்ந்த வணிக மற்றும் சுற்றுலா நடைமுறைகளை மேம்படுத்துதல்

iv. சிவில் பொறுப்பு மற்றும் நெறிமுறைகள் குறித்த நாடளாவிய விழிப்புணர்வு

### ஏனைய துறைகள்

i. நடத்தைகளை மாற்றியமைக்கும் தகவல் தொடர்பாடல் (Behavioral Communication Change) இயக்கங்கள்

ii. டிஜிட்டல் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமைகள்

iii. தன்னார்வலர்கள் மற்றும் பிரஜைகள் பங்கேற்புக்கான கட்டமைப்புக்கள்

## ❖ பிரஜாசக்தி செயலகம்

அரசாங்கத்தின் இலக்குகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக 2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் ஆரம்பிக்கப்பட்ட கொள்கைகள்

2025 ஆம் ஆண்டில் "பிரஜாசக்தி வறுமை ஒழிப்பு தேசிய வேலைத் திட்டத்தை" சிறப்பான வகையில் ஆரம்பிப்பதற்காக கொள்கை ரீதியிலான, நிறுவனம்சார் மற்றும் செய்முறை மட்டத்திலான பல செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது.

- கொள்கை மற்றும் சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் : 2025.02.24 ஆம் திகதி பிரஜாசக்தி தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.
    - தேசிய கொள்கைகள் சபையை நியமிப்பதற்காக 2025.05.19 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் 2025.06.16 ஆம் திகதி அதன் முதலாவது கூட்டத்தை நடாத்தி "பிரஜாசக்தி செயற்குழு" நியமனம்.
    - 2025.08.22 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய பிரஜாசக்தி சுற்றறிக்கையை வெளியிடல்.
- **நிறுவன அமைப்பை தாபித்தல்**: 2025.06.18 ஆம் திகதி அலரி மாளிகையில் (லோட்டஸ் கட்டிடம், 3 ஆம் மாடி) பிரஜாசக்தி செயலகம் தாபிக்கப்பட்டதுடன், 2025.07.04 ஆம் திகதி தேசிய நிகழ்ச்சித் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் தேவையான ஆளணி (அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள்) ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.
- சமூக அபிவிருத்தி சபைகளுக்கான **(Community Development Councils / CDC)** அடிப்படை: அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளும் உள்ளடக்கப்படும் வகையில் சமூக அபிவிருத்தி சபைகளை (CDC) அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதுடன், அவற்றின் சட்ட ரீதியிலான அடிப்படை, அமைப்பு மற்றும் பணிகள் உள்ளிட்ட "வழிகாட்டல் கட்டம் - I " 2025.09.10 ஆம் திகதி வெளியிடப்பட்டது
- கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் சமூக சபைகளை அமைத்தல் - 2025.12.31 ஆம் திகதியன்று 10,426 சமூக அபிவிருத்தி சபைகள் அனைத்து நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- திறன் அபிவிருத்தி : மாவட்ட மற்றும் மாகாண சபை உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதற்காக பயிற்சி மொடியூலை தயாரித்து 09 மாகாணங்கள் மற்றும் 25 மாவட்டங்களும் உள்ளடக்கப்படும் பிரகாரம் அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- தகவல் தொழில்நுட்பம் : பிரஜாசக்தி உத்தியோகபூர்வ இணையத்தளம் (Website) உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.

### ஒருங்கிணைப்பு பணிகள் ஊடாக அடைந்துகொள்ளப்பட்ட சிறப்புப் பெறுபேறுகள்

பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் தரப்புக்களை ஒன்றிணைத்து மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் காரணமாக 2025 ஆம் ஆண்டில் 90% - 100% முன்னேற்றம் அடைந்துகொள்ளப்பட்டுள்ளது.

- அரச உத்தியோகத்தர்களை இணைத்தல் : பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களை, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கு "சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்கள்" என இணைத்து, அவர்களை சகல கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் CDC செயலாளர்களாக நியமித்தல்.
- பிரதேச தலைமைத்துவத்தை ஒருங்கிணைத்தல்: பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்களூடாக சமூக அபிவிருத்தி சபைகளின் தலைவர்களை நியமிப்பதனூடாக கீழ் மட்டத்தின்

அமைப்பு சிறப்பான வகையில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

- நிருவாக ரீதியிலான அறிவுறுத்தல்கள்: மாவட்ட செயலாளர்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் 2025.09.30 ஆம் திகதியாகும்போது 100ூ நிறைவு செய்யப்பட்டுள்ளது. மாகாண சபை உத்தியோகத்தர்களுக்காக 09 மாகாணங்களும் உள்ளடக்கப்படும் பிரகாரம் அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
- தரவுகளை ஒன்றிணைத்தல்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்துடன் கலந்துரையாடி, இலங்கையிலுள்ள மொத்தம் 14,011 கிராம அலுவலர் பிரிவுகளும் உள்ளடக்கப்படும் வகையில் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் கணக்கெடுப்புத் தரவுகளை கிராமிய அபிவிருத்தி திட்டத் தரவுகளுடன் (Village Development Plan)ஒன்றிணைத்து தெரிவு அளவுகோல் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குடன் (Sustainable Development Goals)) சீர்செய்துகொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### எதிர்கொள்ள வேண்டியேற்பட்ட சவால்கள்

2025 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றுகைக் குறிகாட்டிகளை பகுப்பாய்வு செய்யும்போது சில செயற்பாடுகளில் தாமதங்கள் மற்றும் சவால்களை இனங்கண்டுகொள்ள முடியும்.

- நிகழ்நிலை தரவுகள் முறைமையில் தாமதம்: ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டத்திற்கான நிகழ்நிலை தரவுகள் முறைமையை தயாரித்தலின் முன்னேற்றம் 2025 ஆம் ஆண்டிறுதியில் 50% இலும் குறைந்த மந்த கதியில் காணப்பட்டது.
- சமூக கணக்காய்வு சட்டகம் தாமதமடைதல்: கீழ் மட்டத்தில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்குத் தேவையான "சமூக கணக்காய்வு சட்டகம்" (Social Audit Framework) தாபிக்கும் பணிகளை 2025 ஆம் ஆண்டிறுதியாகும்போது நிறைவு செய்தல் சவாலாக இருந்தது.

- தொழில்நுட்பப் பிரிவுகளை அமைத்தலில் காணப்படும் சிக்கல்கள்: 2025 ஆம் ஆண்டில் ஊடக மற்றும் பிரச்சார நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்பப் பிரிவை தாபிப்பதற்கான இலக்கு நிறைவு செய்யப்படவில்லை.

### 2026 ஆம் ஆண்டில் மற்றும் எதிர்கால இடைக்கால கட்டமைப்புடன் தொடர்புடைய முன்னுரிமைகள்

2026 செயல் திட்டத்திற்கமைய, விளிம்பு நிலையில் வாழும் பிரஜைகளை வலுவூட்டல் மற்றும் சமூகத்தினால் வழிநடாத்தப்படும் அபிவிருத்திக்காக (Community-led development) பல முன்னுரிமைகள் இனங்காணப்பட்டுள்ளன.

- சட்ட ரீதியான கட்டமைப்பை பலப்படுத்தல்: "பிரஜாசக்தி சட்டம்" வரைதல் மற்றும் தேசிய அபிவிருத்தி முறைமையுடன் திட்டத்தை இணைப்பதற்கான 09 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- CDC அமைப்பை நிறைவு செய்தல்: அனைத்து CDC 14,020 தாபித்தலை நிறைவு செய்தல், அவற்றின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்காக மாகாண, மாவட்ட, பிரதேச மட்டத்திலான நிறுவனங்களுக்காக பிரதான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை நியமித்தல்.
- ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டங்கள் (இடைக்கால கட்டமைப்பு): 2026 ஆம் ஆண்டிற்காக: 14,020 ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டங்கள், 341 பிரதேச திட்டங்கள், 25 மாவட்டத் திட்டங்கள் மற்றும் 09 மாகாணத் திட்டங்களைத் தயாரித்தல்.

    - 2027 - 2028 ஆண்டிற்காக : எதிர்வரும் ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டங்களின் ஆரம்பக் கட்டங்கள் (உ- ம்: 2027 ஆம் ஆண்டிற்காக 14,020 கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் 2028 ஆம் ஆண்டிற்காக 2,800 அபிவிருத்தித் திட்டங்கள்) ஒருங்கிணைப்புச் செய்தல்.

- அரசாங்கத்தின் மூலதன வரவு செலவுத் திட்டத்தை சீரமைத்தல்: நிரல் அமைச்சுக்களின் பிரதானிகளுடன் 09 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தி, அரசாங்கத்தின் மூலதன முதலீட்டு கிராமிய அபிவிருத்தி முன்மொழிவுகளுடன் ஒன்றிணைத்தல் மற்றும் மாகாண, மாவட்ட, பிரதேச மட்டத்திலான முன்மொழிவுகளை நிகழ்நிலை முறைமையில் உள்ளடக்குதல்.
- டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் தகவல்கள் முறைமைகள்: CDC மற்றும் VDP தரவுகள் சேகரிப்பு முறைமை, கருத்திட்டங்கள் முகாமைத்துவம் மற்றும் பிரஜைகள் பங்கேற்பு முறைமை (Citizen Engagement) உள்ளிட்ட ஒன்றிணைந்த தகவல்கள் முறைinமையொன்றை (Integrated Information Management System) செயற்படுத்தல் மற்றும் அதற்காக உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்.

- நிறுவனம் சார்ந்த ஊக்குவிப்புத் திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்தல்

- கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் சமூக கணக்காய்வு: கணக்காணிப்புத் திட்டமொன்று மற்றும் சமூக கணக்காய்வுத் திட்டமொன்றைத் தயாரித்து CDC மட்டத்தில் (14,020 ) சமூக கணக்காய்வு செயல்முறையை செயற்படுத்தல். பிரஜாசக்தி திட்டம் பற்றிய மாதிரிகணக்கெடுப்பு (4 ஆய்வுகளை) நடாத்துதல்.

- பிரஜாசக்தி எண்ணக்கருவை ஊக்குவித்தல் மற்றும் மக்களுடன் மற்றும் மக்களிடையே தொடர்பை மேம்படுத்துவதற்கான வெகுசன ஊடகம் - பாரியளவிலான அறிவுறுத்தல் ம்றறும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், 10 பகுதிகளைக் கொண்ட தொலைக்காட்சி நாடகத் தொடரொன்றைத் தயாரித்தல், அபிவிருத்திசார் உரையாடல்களை (Development Dialog)நடாத்துதல் மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக விரிவான பிரச்சாரங்களை (காலாண்டில் 20 வீதம்) மேற்கொண்டு பிரஜைகளை தொடர்ச்சியாக அறிவுறுத்துதல்.

## ❖ நிர்வாகம் மற்றும் இராஜதந்திர அலுவல்கள்

நிர்வாகம் மற்றும் இராஜதந்திர உறவுகள் பிரிவு (Administration and Diplomatic Affairs) சனாதிபதி அலுவலகத்தின் மூலோபாயத் திட்டத்துடன் (2025 - 2029) இயைந்து, அரசாங்கத்தின் முன்னுரிமைகளையும் தொலைநோக்கையும் அடைவதற்காக அமைச்சுக்கள் மற்றும் பலதரப்பட்ட பங்குதாரர்களையும் ஒன்றிணைத்தவாறு மூன்று பிரதான துறைகள் (Key Result Areas) ஊடாக மூலம் செயல்படுகிறது:

- அரச துறையின் ஆளுகை **(Public Sector Governance):** வினைத்திறன்மிக்க, ஊழலற்ற மற்றும் பிரஜைகளை மையமாகக் கொண்ட பொது நிர்வாகமொன்றை தாபித்தல்.
- டிஜிட்டல் ஆளுகை **(Digital Governance):** டிஜிட்டல் தொழில்நுட்பத்தை நாட்டின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதியொன்றாகப் பயன்படுத்தி, முழு அரச துறை மற்றும் பொருளாதாரத்தை அடிப்படை மறுசீரமைப்புக்குட்படுத்தல்
- இராஜதந்திர ஆளுகை **(Diplomatic Governance):** இலங்கையின் தேசிய அபிலாஷைகளை அடைந்துகொள்வதற்காக, பயன்மிக்க சர்வதேச உறவுகளையும் சிறந்த இராஜதந்திர ஈடுபாட்டையும் மேற்கொள்ளல்.

அதற்கமைய, நிர்வாகம் மற்றும் இராஜதந்திர உறவுகள் பிரிவின் தலையீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் பின்வருமாறு.

- புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுடன் சிறப்பான ஒருங்கிணைப்பைப் பேணியவாறு அரச உதவியுடனான சமய மற்றும் கலாசார நிகழ்ச்சித் திட்டங்களை முறையாக ஏற்பாடு செய்வதற்குத் தேவையான உதவிவழங்கப்பட்டுள்ளது. பெரஹெரா மற்றும் சமய வைபவங்களை ஏற்பாடு செய்யும்போது சம்பந்தப்பட்ட தரப்பினருடன் வினைத்திறன்மிக்க தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- அரச துறை பரிவர்த்தனையின் கீழ், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, அரச சேவைகளை பொதுமக்களுக்குப் வினைத்திறனுடன வழங்குவதற்கான பொறிமுறைகளை அறிமுகப்படுத்தல்.
- உதாரணம் : e-BMD முறைமை ஊடாக வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு பிறப்பு / விவாகம் / இறப்புச் சான்றிதழ்களை வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை வழங்குதல், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு இணையவழியில் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக தொடர்புடைய நிறுவனங்களுடன் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- டிஜிட்டல் பரிவர்த்தனை மற்றும் அரச சேவையை புதிய தொழில்நுட்பங்களுக்குத் தயார்படுத்தும் நோக்கத்திலான அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளதுடன், அரச நிறுவனங்களில் டிஜிட்டல் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்குத் தேவையான கொள்கைகளைத் தயாரிக்கும் பணிகளும் செயற்படுத்தப்பட்டுள்ளன.
- வெளிநாட்டலுவல்கள் மற்றும் இராஜதந்திர ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் கீழ், அரச தலைவர் மட்டத்தில் மற்றும் அமைச்சர்கள் மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டங்கள் சிறப்பான வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், கௌரவ சனாதிபதியவர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் சர்வதேச சந்திப்புகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- வீசா வழங்கும் முறைகளில் திருத்தம் மேற்கொள்ளல், தூதரக நியமனங்கள் மற்றும் உள்ளூர்

மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு ஆகிய துறைகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்ச்சியான ஒருங்கிணைப்பும் பேணிவரப்பட்டுள்ளது.

- பூகோள அரசியல் நிலைமைகள் பற்றிய வாராந்த அறிக்கைகளைத் தயாரிப்பதனூடாக சர்வதேச ரீதியிலான மாற்றங்கள் குறித்த இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ஏனைய நிரல் அமைச்சுக்களுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பை பேணியவாறு பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி, பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள்கள், தொழிலாளர், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா, டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டங்களுக்கான தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளன.
- "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத் திட்டம்: மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து, போதைப்பொருள் அற்ற ஒரு நல்ல சமூகத்தை உருவாக்கும் நோக்குடன் தேசிய வழிநடாத்தல் குழுவை அமைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் பயன்மிக்க வகையில் தலையீட்டை மேற்கொள்ளல்.
- சனாதிபதி விசாரணை ஆணைக்குழுகளை ஒருங்கிணைப்பதனூடாக ஊழலற்ற நேர்மையான அரச சேவைக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் தேசிய மகளிர் ஆணைக்குழுவை நிறுவி பேணி வருவதற்கான வசதிகளை வழங்குவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

ஒட்டுமொத்தமாக, கவனத்திற்கொள்ளும்போது தொடர்புடைய திட்டங்களும் பணிகளும் திட்டமிட்டபடி வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளதுடன், அரச சேவை வினைத்திறன், டிஜிட்டல் பரிவர்த்தனை, சர்வதேச உறவுகள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு ஆகிய துறைகளில் பயனுள்ள முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

## 2026 ஆம் ஆண்டு மற்றும் எதிர்வரும் நடுத்தர கால சட்டகத்திற்கான முன்னுரிமைகள்

### சமய, கலாசார மற்றும் சமூக ஒருங்கிணைப்பு:

- மதத் தலைவர்கள் / வழிபாட்டிடங்களுடனான ஒருங்கிணைப்பு, அரச அனுசரணையுடனான வருடாந்த பெரஹராக்கள் மற்றும் மத வைபவங்களை ஏற்பாடு செய்தல், மற்றும் கலாசார அமைச்சுடன் இணைந்து கலாசார வைபவங்களை நடாத்துதல்.
- "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத் திட்டம்: தேசிய வழிநடாத்தல் குழுவை ஒருங்கிணைத்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் பயன்மிக்க வகையிலான தலையீட்டை மேற்கொள்ளல்.

### அரச துறையின் பரிவர்த்தனை மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள்:

- பரிவர்த்தனை பொறிமுறை (PIC-Net): அரச துறையில் பரிவர்த்தனை தொடர்பான சுற்றறிக்கைகளை வெளியிடுதல், உள்நாட்டு / வெளிநாட்டு ஒத்துழைப்புகளை ஒருங்கிணைத்தல்.
- • செயலாற்றுகை மதிப்பீடு: "வினைத்திறன்மிக்க அரச சேவை - திறமையை மையமாகக் கொண்ட தொழில் வாய்ப்பு" தகுதியின் அடிப்படையில் ஒரு புதிய செயலாற்றுகை மதிப்பீட்டு முறையை (New Performance Evaluation System) ஒரு முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தல்.

### டிஜிட்டல் ஆளுகை (Digital Governance):

- அரச சேவையை டிஜிட்டல் மயமாக்கல்: செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பான திறன் விருத்தித் திட்டங்களைத் தொடர்ந்து நடாத்துதல் மற்றும் தனியார் துறை பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் அரச துறையில் டிஜிட்டல் அறிவை அதிகரித்தல்.
- சனாதிபதி அலுவலகத்தின் டிஜிட்டல் மயமாக்கல்: மின்னஞ்சல் (E-mail) மற்றும் டிஜிட்டல் கருவிகளின் பயன்பாடு குறித்த கொள்கையை முனைப்புடன் செயல்படுத்துதல்.

## இராஜதந்திர ஆளுகை (Diplomatic Governance):

- சர்வதேச உறவுகள்: இலங்கையின் பிம்பத்தை உயர்த்துவதற்காக சர்வதேச ஒத்துழைப்பாளர்களுடன் நேரடித் தொடர்பைப் பேணிவரல், தூதுவர்களை நியமித்தல் மற்றும் நியமனப் பத்திரங்களை ஏற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அரச விஜயங்கள் : சனாதிபதியவர்களின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்கள் மற்றும் இராஜதந்திர சந்திப்புக்களை திட்டமிட்டு ஒருங்கிணைப்புச் செய்தல்.
- சுற்றுலாத்துறை : இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகள் திட்டத்தை செயற்படுத்துவதற்கான சனாதிபதி செயலணி நடவடிக்கைகள் ஒருங்கிணைப்பு மற்றும் சுற்றுலாத்துறையை கவர்வதற்காக "ஒன்றிணைந்த e – அனுமதிப்பத்திரம் (e-Ticketing) வசதியை" அறிமுகஞ் செய்தல்..

## ❖ நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரிவு

"வளமான நாடு. அழகான வாழ்க்கை" கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான அரச கொள்கைச் சட்டகத்தை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல், துறைசார் அபிவிருத்தி மூலோபாயங்களைத் தீர்மானித்தல், பொருளாதாரத் துறையின் சீர்திருத்தங்கள், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான நிதி வசதிகள் திட்டத்தை ஒருங்கிணைத்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், சந்தை நடவடிக்கைகள், சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான வசதிகளை வழங்குதல், வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகளைத் தயாரித்தல், வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் அலுவலுக்கு உதவி புரிதல், நிரல் மற்றும் துறைசார் நிறுவனங்களை ஒருங்கிணைத்தல், பொருளாதார விடயங்கள் தொடர்பில் வெளிநாட்டுத் தூதுக்குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல், பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல், நிரல் அமைச்சுக்களினால்; அனுப்பப்படும் அமைச்சரவைக் விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை வழங்குதல் உள்ளிட்ட கொள்கை சார்ந்த தீர்மானங்களை எடுக்கும் செயல்முறைக்கு வசதிகளை வழங்கும் மையப் பிரிவாக இந்தப் பிரிவு செயற்படுகின்றது.

இந்தப் பிரிவின் கீழ்,

(i) அரச நிதிசார் செயற்பாடுகள் மற்றும் நிதிக் கொள்கை

(ii) அரச தொழில் முயற்சிகள் மறுசீரமைப்பு, சந்தைச் செயற்பாடுகள் மற்றும் முதலீடு

(iii) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகிய உப விடயங்கள் அடங்கும்.

அந்த விடயங்கள் நிதி மற்றும் பொருளாதார விடயத்தின் கீழ் இனங் காணப்பட்ட முன்னுரிமைகள் மற்றும் செயற்பாட்டுத் தேவைகள் தொடர்பான கொள்கைகளை உருவாக்குதலின் கீழ் தேவைக்கேற்ப அவற்றை அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கும் பணிகளை நேரடியாக ஒருங்கிணைத்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு ஊடாக அந்தப் பொறிமுறையின் செயல்திறன் தொடர்ந்து உறுதி செய்யப்படுவதுடன், இந்த நோக்கத்திற்காக, பின்வரும் பணிகள் முதன்மையாக நிறைவேற்றப்படுகின்றன.

1. பேரினப் பொருளாதார நிலைத்தன்மையை அடைவதற்காக நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து ஒரு வலுவான அரச நிதிக் கொள்கை ஊடாக உயர் சந்தை நம்பிக்கையுடன்கூடிய ஒரு நிலையான மற்றும் வலுவான பொருளாதாரச் சூழலை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான கடன் வசதிகள் திட்டத்தின் கீழ் உள்நாட்டில் செயல்படுத்தப்படும் நிதிப் பாதுகாப்பு முறைமையைப் போன்றே அமைப்பு ரீதியிலான பரிவர்த்தனையை மேற்கொள்வதற்கான நடவடிக்கையின் நிறுவனம்சார் ஒருங்கிணைப்பு மற்றும் மூலோபாயத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு உதவி வழங்கல்.

3. நிதிசார் சீர்திருத்தங்கள் மூலம் வருமானம் ஈட்டலை அதிகரிப்பதற்கான கொள்கை வழிகாட்டல்களை வழங்குதல்.

4. வணிகத்திற்கு உகந்த சூழலை உருவாக்குவதற்காக, பணவீக்கம், அந்நியச் செலாவணி மற்றும் வட்டி

விகிதங்களை நிலையாகப் பேணி வருவதற்காக கொள்கை ரீதியிலான வழிகாட்டல்களை வழங்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்கல்.

5. முதலீடு மற்றும் வர்த்தக விரிவாக்கத்தை முறைப்படுத்தல் ஊடாக நேரடி முதலீடுகளை (Foreign Direct Investments) ஈர்ப்பதற்காக தற்போதுள்ள நிறுவனக் கட்டமைப்புடன் இணைந்து பணியாற்றுதல்.

6. பொருளாதார வளர்ச்சியை பலம்மிக்க வகையில் உறுதி செய்வதற்காக, அரச தனியார் கூட்டாண்மை (PPPs) மூலம் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பை வழங்குதல். மேலும், நிரல் அமைச்சுக்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் உள்ளிட்ட சட்டப்பூர்வ நிறுவனங்களின் விடயப்பரப்புக்கள் மற்றும் செயற்பாட்டு செயல்முறைகளை அரசாங்கக் கொள்கை கட்டமைப்புடன் இயைந்திருக்கச் செய்தல், அந்த நிறுவனங்கள் தாபிக்கப்பட்டமையின் நோக்கங்களையும் இலக்குககளையும் அடைவதற்கான வசதிகளை வழங்கல் மற்றும் சிக்கல்களைத் தீர்க்கும் நோக்கில் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான வழிகாட்டுதல்களையும் பரிந்துரைகளையும் வழங்குதல்.

7. அரசாங்கத்தின் கொள்கைகளைச் செயற்படுத்தும்போது அவ்வப்போது எழும் சிக்கல்கள் தொடர்பாக தொழில்நுட்ப மீளாய்வுகளை மேற்கொள்ளல், உடன்பாட்டு பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பொறிமுறைகளை இனங்காணல் மற்றும் அதன் மூலம் நல்லாட்சிக் கோட்பாடுகளுடன் ஆட்சியை சீரமைக்கும் நோக்கில் நிதி மற்றும் பொருளாதாரப் விடயப்பரப்பின் அமைப்பு மற்றும் செயற்பாடுகள் சாத்தியப்பாடுகளை நடைமுறைப்படுத்தல்;

## ❖ உணவுப் பாதுகாப்பு மற்றும் கொள்கைப் பிரிவு

### 1. உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் பணிகளை ஒருங்கிணைத்தல்

- கௌரவ சனாதிபதியவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 24/2089/801/003 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2024.12.19 ஆம் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கமைய உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டதுடன், உணவுப் பாதுகாப்பு மற்றும் கொள்கைப் பிரிவினால் இந்தக் குழுவிற்குத் தேவையான செயற்பாட்டு மற்றும் கண்காணிப்பு உதவி வழங்கப்படுகிறது.

- 2025 ஆம் ஆண்டில் 24 குழு அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. அதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுடன் அமைச்சரவையின் அங்கீகாரம் மற்றும் தகவலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரங்களின் எண்ணிக்கை 22 ஆகும். மேலும், உர விநியோகம் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி உள்ளிட்ட விசேடமாக கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக 3 அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவால் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க, மேலும் கலந்துரையாடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டிய பரிந்துரைகளை வழங்குவதற்காக உப குழுக்கள் அமைக்கப்பட்டு தொடர்புடைய பரிந்துரைகளுக்கு இணங்க அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அந்த உப குழுக் கூட்டங்களை நடாத்துதல், குழு அறிக்கைகளுக்காக ஆதார அடிப்படையிலான தரவுகளையும் தகவல்களையும் வழங்குதல், இறுதிக் குழு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் முன்னேற்றம் குறித்து அறிக்கையிடல் உணவுப் பாதுகாப்பு மற்றும் கொள்கைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| தொ.இல. | உப குழு | முன்னேற்றம் |
|---|---|---|
| i. | இலங்கைக்குப் பொருத்தமான உணவுப் பாதுகாப்புக் குறிகாட்டியை அடையாளம் காணல் மற்றும் மூலோபாயத் திட்டத்தை தயாரிப்பதற்கு சனாதிபதி அலுவலகத்தின் உணவுப் பாதுகாப்பு மற்றும் கொள்கைப் பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட கற்றறிந்தோர் குழு | ▪ உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் உலக உணவுத் திட்டத்தின் ஒருங்கிணைப்பில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்களையும் அறிவுறுத்துவதற்கான முதலாவது செயலமர்வு 2025.06.17 ஆம் திகதி நடாத்தப்பட்டது.<br>▪ செயலமர்வுடன் தொடர்புடைய எண்ணகருத்தியல் பத்திரமொன்றை தயாரித்தல் மற்றும் உப குழுவுக்கு சமர்ப்பித்து கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2 உப குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. |
| ii. | நாட்டில் இருந்து ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சலை ஒழித்தல் மற்றும் பன்றித் வளர்ப்புத் தொழிலை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக நடைமுறையில் செயற்படுத்த வேண்டிய துரித மற்றும் முறையான தீர்வுகளை முன்வைத்தல் மற்றும் தீர்வு செயல்முறை களத்தில் செயற்படுத்தப்படுவதனை கண்காணிப்பதற்காக விவசாயம், கால்நடை வளர்ப்பு, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் மற்றும் சனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் (அபிவிருத்தி நிர்வாகம்) ஆகியோரின் இணைத் தலைமையில் அமைக்கப்பட்ட செயலணி. | ▪ செயலணியின் 08 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.<br>▪ கிருமிநாசினிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்குத் தேவையான விவரக் குறிப்புகளைத் (ளிநஉகைiஉயவழைn) தயாரிப்பதற்காக பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.<br>▪ கால்நடைகள் தொடர்பான பிரதேச அலுவலகங்களால் பன்றிக் காய்ச்சலுக்கான பண்ணைகள் மட்டத்தில் சோதனைகளை நடாத்துதல் மற்றும் அதற்கான சோதனைக் கருவிகளை வழங்குதல்.<br>▪ பன்றிக் காய்ச்சல் தொற்று ஆரம்பம் முதல் கால ஓட்டத்துடன் வைரஸின் எதிர்ப்புத்திறன் மற்றும் அதன் மாற்றம் தொடர்பாக பேராதனை பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்பக் குழுவொன்றை அமைத்தல்.<br>▪ பன்றிக் காய்ச்சல் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட பண்ணைகளை மீளக் கட்டியெழுப்புவதற்காக சலுகைக் கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல், அதனுடன் தொடர்பாக அபிவிருத்தி நிதித் திணைக்களம் மற்றும் கமத்தொழில் அமைச்சுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல். கடன் விண்ணபித்தவர்களில் 50மூ பேருக்கு கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>▪ சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளைத் திருத்துவதற்காக கமத்தொழில் அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு மற்றும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றுடன் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.<br>▪ பன்றிகளின் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தலுடன் தொடர்பான கால்நடைகள் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.<br>▪ பன்றிப் பண்ணைகளின் பதிவு தொடர்பான சட்ட ஏற்பாடுகளை வலுப்பெறச் செய்வதற்காக கால்நடை நோய்கள் சட்டத்தைத் திருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br>▪ பன்றி அறுவை கூடங்கள் ஒழுங்குபடுத்தலுடன் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை வலுப்பெறச் செய்வதற்காக மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| தொ.இல. | உப குழு | முன்னேற்றம் |
|---|---|---|
| iii. | தொடர்ச்சியான முட்டை ஃ கோழி இறைச்சி உற்பத்தியைப் பேணிவரல் மற்றும் நிலையான முட்டை / கோழி இறைச்சி விலைகளைப் நிலையாகப் பேணுவதற்கும் ஒரு முறையான திட்டத்தைத் தயாரிப்பதற்காக, சனாதிபதியின் மேலதிக செயலாளரின் (உணவுப் பாதுகாப்பு மற்றும் கொள்கை) தலைமையில் அமைக்கப்பட்ட உப குழு | ▪ 2025.06.25 ஆம் திகதி நடைபெற்ற 11 ஆவது உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் தீர்மானத்திற்கமைய நியமிக்கப்பட்ட குழுவின் முதலாவது கூட்டம் 2025.08.26 ஆம் திகதியும் இரண்டாவது கூட்டம் 2025.10.29 ஆம் திகதியும் நடைபெற்றது.<br>▪ அதன்போது தொடர்புடைய பரிந்துரைகளுடன் கூடிய குழுவின் அறிக்கைக்கு உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளை செயற்படுத்தல் உணவுப் பாதுகாப்பு மற்றும் கொள்கைப் பிரிவால் கண்காணிக்கப்படும். |
| iv. | பெரிய வெங்காய அறுவடையைக் கொள்வனவு செய்வதற்கான பொருத்தமான பரிந்துரைகளுடன் கூடிய ஒரு நீண்டகால பொறிமுறையைத் தயாரிப்பதற்காக, சனாதிபதி அலுவலகத்தின் மேலதிக செயலாளரின் (உணவுப் பாதுகாப்பு மற்றும் கொள்கை) தலைமையில் அமைக்கப்பட்ட உப குழு | ▪ 2025.08.04 ஆம் திகதி சனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற 14 ஆவது உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய, பெரிய வெங்காய அறுவடையைக் கொள்வனவு செய்வதற்குப் பொருத்தமான பரிந்துரைகளுடன் கூடிய ஒரு நீண்டகால பொறிமுறையைத் தயாரிப்பதற்கான உப குழுவின் அறிக்கை 2025.08.18 ஆம் திகதி உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் மீதான சிறப்பு வர்த்தகப் பண்டங்கள் வரியை அதிகரிப்பதற்கான வரித் திருத்தம் குறித்து நிதி அமைச்சரால் வர்த்தமானி அறிவிப்பை வெளியிடுவது தொடர்பாகத் தேவையான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டது. |

– உணவுப் பாதுகாப்பு மற்றும் கொள்கைப் பிரிவினால் அத்தியாவசிய மற்றும் அடிப்படை உணவுகளின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்தல், தளம்பலற்ற விலை, இறக்குமதி மற்றும் இறக்குமதி வரி திருத்தங்கள் குறித்த தீர்மானங்களை எடுத்தல் மற்றும் உணவு உற்பத்தி, விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தலை முறைப்படுத்துவதற்கான தரவுகள் மற்றும் தகவல் பகுப்பாய்வுகளை சந்தர்ப்பத்திற்கேற்ப வழங்குவதன் மூலம் கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுப்பதற்கு உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்கியது. அவ்வாறு எடுக்கப்பட்ட பின்வரும் முக்கிய தீர்மானங்களை செயற்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பை இப்பிரிவு மேற்கொண்டது;

  - தற்போதுள்ள தரவுத் தளங்களின் (data bases) தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் முறையைப் பலப்படுத்துதல், தரவுகளின் பிழையற்ற தன்மை ஃ தரத்தை மேம்படுத்துவதற்காக ஏனைய அனைத்து தொடர்புடைய தரவு முறைமைகளுடன் தொடர்புபடுகின்ற மற்றும் தரவு காட்சிப்படுத்தல் (data visualization) வசதியுடனான "உணவுப் பாதுகாப்பு தரவு அமைப்பை" சனாதிபதி அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட வகையில் நிறுவுதல். இங்கு, அடையாளம் காணப்பட்ட உணவுப் பொருட்கள் குறித்த தரவுகளைப் பெற்றுக்கொள்ளல், ஒவ்வொரு நிறுவனத்திடமும் தற்போது காணப்படும் தரவு அமைப்புகளையும் புதிய தரவு அமைப்புடன் இணைப்பதற்காக API மூலம் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அடையாளம் காணப்பட்ட பிரதான உணவுப் பொருட்களின் மலிவுத் தன்மை, விநியோகம் மற்றும் சந்தை விலை தரவுகளைக் காட்சிப்படுத்துவதற்காக தரவுப் பலகைகளைத் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை ஊக்குவித்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நிலையான தீர்வுகளை வழங்குவதற்கு சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் தலைமையில் ஒரு திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தல்.
- நெல்லை சேகரித்து வைப்பவர்களை ஒழுங்குபடுத்துவதற்கு முடியுமான வகையில் நெல் சந்தைப்படுத்தல் சபை சட்டத்தைத் திருத்துதல் மற்றும் அதற்கேற்ப 2025.02.01 திகதிய 2421ஃ54 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குதல்.

- வீட்டுப் பாவனைக்கான போதுமானளவில் தேங்காயை வழங்குவதற்காக உள்ளூர் உற்பத்தியை உறுதி செய்வதற்காக தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் குளிரூட்டப்பட்ட தேங்காய் சதை மற்றும் உலர்ந்த தேங்காய்த் துண்டுகளை இறக்குமதி செய்வது தொடர்பான கொள்கை ரீதியலான தீர்மானங்களை எடுத்தல்.
- அரச நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட விலங்குணவு உற்பத்தியாளர்களுக்காக 300,000 மெட்ரிக் தொன் மக்காச்சோளத்தை இறக்குமதி செய்வதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.
- அரிசி தவிடு மூலம் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய்க்கு (Rice Bran Oil) ஒரு தனிக் குறியீட்டை (HS Code) அடையாளம் கண்டுகொள்ளல் மற்றும் அதற்கான புதிய சுங்கக் குறியீட்டிற்கான திருத்தப்பட்ட வரி அமைப்பைத் தயாரித்து அங்கீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

- சந்தையில் பற்றாக்குறையாகக் காணப்படும் அரிசி வகைகளின் போதுமான விநியோகத்தை உறுதி செய்வதற்காக, அரச நிறுவனங்கள் ஊடாக 40,000 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- திரிபோஷ உற்பத்திக்குத் தேவையான மக்காச்சோளத்தை நேரடியாக இறக்குமதி செய்வதற்கு திரிபோஷ லிமிடெட் நிறுவனத்திற்கு அங்கீகாரத்தை வழங்குதல்.
- சர்வதேச நெருக்கடிச் சூழ்நிலைகள் காரணமாக ஏற்படுகின்ற உணவுப் பாதுகாப்பு அபாயங்களுக்கான தயார்நிலை தொடர்பான தரவுகள், தகவல்கள் மற்றும் முன்மொழிவுகளைக் கொண்ட அறிக்கையை இலங்கைப் பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 2. அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள்

“வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் ஊடாக எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைந்துகொள்ளும் நோக்கத்துடன், அரச முதலீட்டுத் திட்டத்தினூடாக 2025 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதி ஒதுக்கீடுகளை உச்சளவில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக மூலதன ஒதுக்கீடுகளுடன் தொடர்புடைய அபிவிருத்தித் திட்டங்கள் ஃ கருத்திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் பணி உணவுப் பாதுகாப்பு மற்றும் கொள்கைப் பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

### i. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் - 2025

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டமானது நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரது 2025.01.29 ஆம் திகதிய MF/02/2025 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு இணங்க, சனாதிபதி அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் செயல்படுத்தப்படுவதுடன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களால் சமர்ப்பிக்கப்படும் கருத்திட்ட முன்மொழிவுகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடுகள் மாவட்டச் செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

– 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்காக 2,250 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடு தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்குரிய செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், கிராமிய அபிவிருத்தி, வறுமையைக் குறைத்தல் மற்றும் மக்களின் வருமான மட்டத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு உற்பத்திப் பொருளாதாரத்திற்குப் பங்களிக்கும் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல் அல்லது மேம்படுத்துதல் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்திக்காக 2025.12.31 ஆம் திகதியாகும்போது மாவட்ட அளவில் 1,531 கருத்திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் பற்றிய தொடர்ச்சியான கண்காணிப்பை கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்துடன் சனாதிபதி அலுவலகம் இணைந்து மேற்கொள்வதுடன், 2025.12.31 ஆம் திகதியன்று 1,520 கருத்திட்டங்களின் பணிகள் 100% பௌதிக ரீதியாக நிறைவ செய்யப்பட்டுள்ளதுடன், 2,102.58 மில். ரூபா நிதிசார் முன்னேற்றம் காணப்படுகின்றது. 2025.12.31 ஆம் திகதியன்று நிதிசார் முன்னேற்றம் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டின் 93% ஆகும். மேலும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்துடன் பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மேற்பார்வையின் கீழ் மாவட்ட முன்னேற்றத்தைக் கண்காணித்த பின்னர், மாவட்டங்களுக்கு 69 அவதானிப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

## ii. நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட மூலதன ஒதுக்கீடுகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்

அரசாங்கத்தினால் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க நிதி ஆணைக்குழுவிடம் வினவி வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட மூலதன ஒதுக்கீடுகள் மூலம் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களுடன் தொடர்புடைய உயர் நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றத்தை அடைந்துகொள்ளும் நோக்கத்துடன் கருத்திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது.
அதற்கமைய, மத்திய அரசால் வழங்கப்பட்ட மூலதன நிதி ஒதுக்கீடுகள் மூலம் செயல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தை சனாதிபதி அலுவலகத்தினால் மாதாந்தம் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், கருத்திட்டங்களைச் செயற்படுத்தும்போது எழும் சிக்கல்களுக்கு தேசிய மட்டத்தில் தேவையான ஆதரவை வழங்குதலைப் போன்றே கருத்திட்டங்களைச் செயற்படுத்தும்போது ஏதேனும் பின்னடைவுகள் அவதானிக்கப்படும் சந்தர்ப்பங்களின்போது அது சம்பந்தமாக தொடர்புடைய மாகாண அதிகாரிகளின் கவனத்தையும் ஈர்க்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2025 ஆம் ஆண்டில், நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நிரல் அமைச்சுக்கள் மூலம் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட 81,592.67 மில். ரூபா மூலதன ஒதுக்கீடுகள் மூலம் 24,397 பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட மூலதன ஒதுக்கீடுகளுடன் தொடர்பான நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம் தொடர்பான தொடர்ச்சியான கண்காணிப்பை சனாதிபதி அலுவலகம் மேற்கொள்வதுடன், 09 மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட மூலதன ஒதுக்கீடு கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் மாகாணங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்த பின்னர், 24 கண்காணிப்புக் கடிதங்கள் மாகாண சபைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 2025.12.31 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட 26,954 கருத்திட்டங்களில், 23,937 திட்டங்களின் பணிகள் 100% பௌதிக ரீதியாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மொத்த நிதிசார் முன்னேற்றம் 59,688.34 மில்லியன் ரூபாவாகும். அதற்கமைய, அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுடன் ஒப்பிடுகையில் 2025.12.31 ஆம் திகதியன்று 73% நிதிசார் முன்னேற்றம் காணப்படுகின்றது.

## iii. 2025 வரவு செலவுத் திட்ட மூலதன ஒதுக்கீடுகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்

அமைச்சுக்களுடன் இணைந்த நிறுவனங்களுடன் தொடர்புடையதாக 2025 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய மூலதனக் கருத்திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்ற அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன், ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள், கருத்திட்டங்களின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தின் கட்டங்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ளும் நிலைமை தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைய, செயற்படுத்தப்பட்டுவருகின்ற கருத்திட்டங்களின் இலக்குகளுக்கமைய பல கருத்திட்டங்களின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தை அடைவதற்கான மீளாய்வுகளின் அடிப்படையில், மூலதன ஒதுக்கீடுகளுடன் தொடர்புடைய கருத்திட்டங்கள் செயற்படுத்தலின் முன்னேற்றம் குறித்த விசேட அவதானிப்புக்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன், இதன் மூலம், காலாண்டு இலக்குகளை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சுக்கள் ஊக்குவிக்கப்பட்டன.

மூலதன ஒதுக்கீடுகளுடன் தொடர்புடைய கருத்திட்டங்களைச் செயல்படுத்தும்போது சிக்கலான சூழ்நிலைகளை எதிர்கொண்ட அமைச்சுக்களுக்கு, அந்தச் சிக்கலான சூழ்நிலைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நிறுவனம்சார் ஒருங்கிணைப்பைப் போன்றே கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான உதவியும் வழங்கப்பட்டது. மேலும், அமைச்சுக்களின் காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் தொடர்ச்சியான பங்கேற்பு மேற்கொள்ளப்படுவதுடன், அந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் எழுப்பப்படும் சிக்கல்களை உடனடியாகத் தீர்ப்பதற்காக, மேற்கூறிய நிறுவனம்சார் ஒருங்கிணைப்பும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான உதவியும் வழங்கப்படுகின்றது. அதற்கமைய, மூலதன வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அமைச்சுக்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்த பின்னர், அமைச்சுக்களுக்கு 57 அவதானிப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், மூலதன வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அனைத்து அமைச்சுக்கள் ஊடாக செயற்படுத்தப்பட்ட வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.12.31 ஆம் திகதியன்று மூலதன மீதிகள் குறித்து 2025.07.28 ஆம் திகதியன்று எதிர்வுகூறல் அறிக்கை

தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### iv. அபிவிருத்திச் செயற்பாடுகளுடன்; தொடர்பான பொதுவான கோரிக்கைகள்

அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்கள் தங்களது குறைகள், கோரிக்கைகள், முன்மொழிவுகள், கருத்துக்களைத் தெரிவித்து சனாதிபதி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல்களுக்கு விடயப் பரப்பிற்கமைய சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் / திணைக்களங்கள் / நிறுவனங்களுக்கு உடனடியாக அனுப்புதல், தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 2025.01.01 முதல் 2025.12.31 வரை பொதுமக்களால் அனுப்பப்பட்ட 722 குறைகள், கோரிக்கைகள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் / திணைக்களங்கள் / நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்தப் பிரிவால் 731 கடிதங்கள் தயாரிக்கப்பட்டு தீர்வுகள் மற்றும் பதிலளிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 3. அமைச்சுக்களுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு ஆகிய அமைச்சுக்களுடன் தொடர்புடையதாக சனாதிபதி அலுவலகத்திற்கு பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 319 கோரிக்கைகள் / பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு, தேவையான ஒருங்கிணைப்பும் பின்தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டன.

## 4. விசேட கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதை ஒருங்கிணைத்தல்

- நில்வலா உப்புத் தடுப்பு நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் எழுந்துள்ள பிரச்சனைகளுக்குக் குறுகிய கால மற்றும் நீண்ட காலத் தீர்வுகளை வழங்குதல் தொடர்பாக 7 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், 11 முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்தோடு 2 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் 2 சிறப்பு அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் தேவையான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
  வன விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதத்தை முகாமைப்படுத்துவதற்கான தேசிய வழிகாட்டல் குழுவின் செயற்பாடுகள் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- யானை – மனிதர்கள் மோதலை முகாமைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட மாவட்டக் குழுக்களின் ஒருங்கிணைப்புக்காக சுற்றறிக்கை வெளியிடப்பட்டு, இது தொடர்பாக 7 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.
- இலங்கையில் தேயிலை, தென்னை, கறுவாப்பட்டை மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கை தொடர்பான விடயங்களுடன் தொடர்புடைய சிறப்பு ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் கூட்டப்பட்டு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.
- கைவிடப்பட்ட வயல் காணிகளில் தென்னைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல் தொடர்பாக விசேட கூட்டங்கள் கூட்டப்பட்டு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.
- மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து விசேட குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.
- சனாதிபதி அலுவலகத்தின் “செயலாற்றுகை அறிக்கை - 2024” இனைத் தயாரித்தல் மற்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- மாகாண அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்தும்போது மாகாண சபைக்கும் மத்திய அரசுக்கும் இடையில் நிலவுகின்ற சட்ட, நிர்வாக மற்றும் செயற்பாட்டு சிக்கல்கள் குறித்து மாகாண சபைகளால் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பித்தல்.
- டிட்வா சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கான நிவாரணக் கோரிக்கைகள் தொடர்பில் கிடைக்கும் கடிதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- “டிட்வா சூறாவளி” காரணமாக சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைப்பதற்காக கௌரவ சனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களைச் செயற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை 08 மாவட்டங்களிலிருந்து பெறப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 2025.12.31 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை 06 ஆகும்.

## ❖ அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட அலுவல்கள் பிரிவு

- 2025 ஆம் ஆண்டில் சனாதிபதி அலுவலகத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்த அரசியலமைப்புச் சட்ட, சட்டரீதியான மற்றும் நிறைவேற்று கடமைகள் திட்டமிட்டவாறு முழுமையான செயல்திறனுடன் நிறைவேற்றப்பட்டு, தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளிலும் 100% முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

- அதன்படி, அரசியலமைப்பின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய நியமனங்கள் உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், சனாதிபதின் கட்டளைகளின் கீழ் மேற்கொள்ளப்படும் நியமனங்களும் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைகளுக்குள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், பல்வேறு சட்டங்களும் அரசியலமைப்புச் சட்ட ஏற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு கௌரவ சனாதிபதியினால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகள் எவ்வித தாமதமுமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளன.

- அதேபோன்று, அரச காணிகள் தொடர்பாக கௌரவ சனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் வகையில், உரிய அனுமதிகளுடன் அரச காணிகள் வழங்கும் பணிகளும் முறையாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- இச்செயற்பாடுகள் அனைத்தும் சட்ட மற்றும் நிர்வாக நடைமுறைகளுக்கு அமைவாக திறம்பட மேற்கொள்ளப்பட்டதன் மூலம் நல்லாட்சியை, வெளிப்படைத்தன்மையை மற்றும் அரச நிர்வாக செயல்திறனை மேலும் வலுப்படுத்துவதற்கு பங்களித்துள்ளன.

### கௌரவ சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை நடைமுறைப்படுத்த உதவுதல் (Facilitate the implementation of the President's Executive Powers)

- பிரதம அமைச்சர், அமைச்சரவை அமைச்சர்கள், அமைச்சரவை அல்லாத அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களை நியமித்தல் மற்றும் பதவியிலிருந்து நீக்குதல்.
- அமைச்சர்களின் விடயங்களையும் பொறுப்புகளையும் நிர்ணயித்தல்.
- அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமித்தல்.
- அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுக்களின் தலைவர்கள் / உறுப்பினர்களை நியமித்தல் மற்றும் நீக்குதல்.
- கௌரவ சட்டமா அதிபர், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், கணக்காய்வாளர் நாயகம், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (Ombudsman), பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரை நியமித்தல் மற்றும் நீக்குதல்.
- தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் ஏனைய தூதுவர் பிரதிநிதிகளை நியமித்தல் மற்றும் நீக்குதல்.
- சனாதிபதியின் செயலாளரை நியமித்தல்.
- பிரதம அமைச்சரின் செயலாளர் மற்றும் அமைச்சரவை செயலாளரை நியமித்தல்.
- அமைச்சுக்களின் செயலாளர்களை நியமித்தல் மற்றும் நீக்குதல்.

### பாராளுமன்றத்துடன் தொடர்புடைய சனாதிபதியின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த உதவுதல் (Facilitate the implementation of the President's powers relating to the Legislature)

- பாராளுமன்றத்தில் பங்கேற்றல், உரையாற்றல் மற்றும் செய்திகளை அனுப்புதல்.
- ஒவ்வொரு அமர்வின் தொடக்கத்திலும் அரசாங்கக் கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்தல் மற்றும் தொடக்க அமர்வுகளுக்கு தலைமை தாங்குதல்.
- பாராளுமன்றத்தை கூட்டுதல், ஒத்திவைத்தல் மற்றும் கலைத்தல்.

### சட்டமியற்றல் தொடர்பாக

- மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பில் அங்கீகரிக்கப்பட்ட சட்டமூலங்கள் / அவற்றின் பகுதிகளை சட்டமாக்க கையொப்பமிடுதல்.
- சட்டமூலம் அல்லது ஏதேனும் விடயத்தை மக்கள் வாக்கெடுப்பிற்கு அனுப்புதல்.
- அவசர சட்டமூலம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் கருத்தினைக் கோருதல்.
- மாகாண சபை விடயங்கள் தொடர்பான சட்டமூலங்கள் குறித்து மாகாண சபைகளின் கருத்தினை வினவுதல்
- அவசரகால ஒழுங்குவிதிகளைப் பிறப்பித்தல்.

## நீதிமன்றம் தொடர்புடைய சனாதிபதியின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த உதவுதல் (Facilitate the implementation of the President's powers relating to the Judiciary)

- பிரதம நீதியரசர், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் மற்றும் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளை நியமித்தல் மற்றும் நீக்குதல்.
- தலைமை நீதியரசர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் ஆகியோருக்கு தற்காலிகமாக பதவி வகிக்க முடியாத சந்தர்ப்பங்களில் பதில் கடமைக்குப் பொருத்தமான நபர்களை நியமித்தல்.
- உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு ஏனைய கடமைகளை மேற்கொள்ள அனுமதி வழங்குதல்.
- நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களை நியமித்தல்.
- மேல்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல், நீக்குதல் மற்றும் ஒழுகாற்று நிர்வாகம் ஆகியவற்றை மேற்கொள்ளுதல்.
- உயர்நீதிமன்ற ஆணையாளர்களை நியமித்தல், நீக்குதல் மற்றும் ஒழுகாற்று நிர்வாகம் ஆகியவற்றை மேற்கொள்ளுதல்.
- நீதிபதிகளின் தாபன அலுவல்கள்.

## நியதிச்சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கௌரவ சனாதிபதியின் கடமைகளை நிறைவேற்ற உதவுதல் (Facilitate the performance of statutorily mandated Presidential duties)

- அரச காணிகளை பாராதீனப்படுத்தல் தொடர்பான பணிகள்.
- பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ்
  - அவசரநிலையை அறிவித்தல்.
  - அவசரகால ஒழுங்குவிதிகளைப் பிறப்பித்தல்.
  - ஆயுதப்படைகளை செயற்பாட்டுச் சேவைக்கு அழைத்தல்.
  - ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தல்.

- இலங்கை கடற்படை நீரியற் சேவையை தேசிய மட்டத்தில் பராமரிக்க சட்ட அதிகாரங்களை கையளித்தல் தொடர்பான நடவடிக்கைகள்.
- கடல்சார் வலயங்கள் சட்டத்தின் கீழான நடவடிக்கைகள்.
- அத்தியாவசிய சேவைகள் சட்டத்தின் கீழான நடவடிக்கைகள்.
- இலங்கை சாரணர் சங்கச் சட்டத்தின் கீழ் தலைமைச் சாரணராக சனாதிபதியின் கடமைகள் தொடர்பான நடவடிக்கைகள்.
- விசாரணை ஆணைக்குழுக்களை நியமித்தல் தொடர்பான பணிகள்.
- விசேட சனாதிபதி ஆணைக்குழுக்களை நியமித்தல் தொடர்பான பணிகள்.
- வெளிநாட்டு மருத்துவ மாணவர்களுக்கு இலங்கையில் பயிற்சி (Internship) மேற்கொள்ள அனுமதி வழங்குதல்.
- பல்வேறு நியதிச்சட்டரீதியான நியமனங்கள்.

## மாகாண சபைகள் தொடர்பான சனாதிபதியின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த உதவுதல் (Facilitate the implementation of the President's Powers relating to Provincial Councils)

- மாகாண சபைகளை நிறுவுதல்.
- மாகாண ஆளுநர்களை நியமித்தல், நீக்குதல் மற்றும் ஆளுநர்களுக்கு கட்டளைகள் வழங்குதல்.
- அரசியலமைப்பின் அடிப்படையில் மாகாண சபை / மாகாண சபைகளின் நிர்வாகம் சீராக இயங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது எனத் திருப்தியடைந்த பின் தேவையான முடிவுகளை எடுத்தல்.
- நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்படும் மாகாண சபைகளுக்கான அரச நிதி ஒதுக்கீடுகளை அங்கீகரித்தல்.

## சனாதிபதியின் ஏனைய பணிகளை நிறைவேற்ற உதவுதல் (Perform other Presidential Functions)

- சனாதிபதி சட்டத்தரணிகளை நியமித்தல்.
- நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டவர்களுக்கு சனாதிபதி மன்னிப்பு வழங்குதல்.
- குடியரசின் முத்திரையைப் பாதுகாத்தல் மற்றும் அதிகாரப்பத்திரங்களில் அதனைப் பதித்தல்.
- நிதிக் கட்டுப்பாடுகள் தொடர்பான அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல்.

- யுத்தம் மற்றும் சமாதானத்தை பிரகடனம் செய்தல்.
- இருமொழிப் பிரதேச செயலகப் பிரிவுகளை நிர்ணயித்தல்.
- தேசிய விருதுகள் மற்றும் ஆயுதப்படை உறுப்பினர்களுக்கான வீரப் பதக்கங்கள் வழங்குதல் தொடர்பான பணிகள்.
- கௌரவ சனாதிபதியினால் 2025 ஆம் ஆண்டு வரை நியமிக்கப்பட்டவர்களால் 2025 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கைகளைப் பெறுதல்.
- பெறுகை மேன்முறையீட்டு சபை தொடர்பான பணிகள்.
- அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் அவர்களது பொதுப் பணியாள்தொகுதி தொடர்பான அரச செலவுகளை முகாமை செய்தல் தொடர்பான பணிகள்.
- இலங்கை குடியரசின் முன்னுரிமைப் பட்டியல் தொடர்பான பணிகள்.
- அரசியலமைப்பு மற்றும் ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் கௌரவ சனாதிபதியால் நியமிக்கப்பட்டவர்களின் தாபன / வெளிநாட்டு விடுமுறை தொடர்பான பணிகள்
- கௌரவ சனாதிபதி சார்பில் உதவி அலுவலர்களை அழைப்பதற்கான நடவடிக்கைகள்.
- புத்தாண்டு அரச கடமைகள் ஆரம்பிக்கும் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள்.
  இலங்கை சாரணர் சங்கச் சட்டத்தின் கீழ் தலைமைச் சாரணராக சனாதிபதியின் கடமைகள் தொடர்பான நடவடிக்கைகள்.
- விசாரணை ஆணைக்குழுக்களை நியமித்தல் தொடர்பான பணிகள்.
- விசேட சனாதிபதி ஆணைக்குழுக்களை நியமித்தல் தொடர்பான பணிகள்.
- வெளிநாட்டு மருத்துவ மாணவர்களுக்கு இலங்கையில் பயிற்சி (Internship) மேற்கொள்ள அனுமதி வழங்குதல்.
- பல்வேறு நியதிச்சட்டரீதியான நியமனங்கள்.
- தேசிய அடையாளங்கள் மற்றும் சின்னங்கள் தொடர்பான நடவடிக்கைகள்.

## ❖ மூலோபாய அலுவல்கள் பிரிவு

இப்பிரிவு 2025 ஆம் ஆண்டில் காணி முகாமைத்துவம், முதலீட்டு வசதிகள், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அமைச்சுகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது.

மேலும், டிட்வா பேரிடர் சூழ்நிலைகளின் போது மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் உயிர்காக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக செயலூக்கமான தலையீட்டினை மேற்கொண்டது.

ஒருங்கிணைக்கப்படும் அமைச்சுகளுக்குரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளல்.

எனினும், பல்வேறு நிறுவனங்களின் காணி எல்லைகள் தொடர்பான தெளிவின்மை மற்றும் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப நடைமுறையில் உள்ள சட்டங்களை அமல்படுத்தும் போது எழும் சிக்கல்கள் முக்கிய சவால்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் முதலீட்டிற்காக அடையாளம் காணப்பட்ட காணிகளை முதலீட்டாளர்களுக்கு வழங்குதல், காலாவதியான சட்டங்கள் தொடர்பாக கொள்கை ரீதியான முடிவுகளை எடுப்பதற்கு உதவுதல் மற்றும் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை மேலும் ஒருங்கிணைத்தல் ஆகியன முக்கிய இலக்குகளாகும்.

## ❖ சனாதிபதி நிதியம்

வறுமை ஒழிப்பிற்கு நிவாரணம் வழங்குதல், கல்வி அல்லது அறிவை மேம்படுத்துதல், சமயங்களை மேம்படுத்துதல், தேசத்திற்காக சேவையாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்குதல் மற்றும் பொதுமக்களின் நலன் அல்லது நல்வாழ்விற்கான ஏனைய செயற்பாடுகளுக்காக நிதியுதவி வழங்கும் நோக்கில், **"சனாதிபதி நிதியம்"** என்ற பெயரில் **1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின்** மூலம் **1978 நவம்பர் 24 ஆம் திகதி** இந்நிதியம் தாபிக்கப்பட்டது.

### சனாதிபதி நிதியத்தின் தொலைநோக்கு

"வளமான நாடு அழகான வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்காக அறிவாற்றல் மிக்கதும் ஆரோக்கியமானதுமான இலங்கை சமூகம்

### சனாதிபதி நிதியத்தின் செயற்பணி

அறிவாற்றல் மிக்க, ஆரோக்கியமான மற்றும் வலிமைமிக்க இலங்கை சமூகத்தை உருவாக்கும் நோக்கில், சனாதிபதி நிதியச் சட்டத்தின் நோக்கங்களை செயல்திறனுடன் நிறைவேற்றுவதற்காக சனாதிபதி நிதியத்தின் ”நிதி” ஐ வெளிப்படைத்தன்மையுடனும் பயன்திறனுடனும் பயன்படுத்துதல்.

#### சனாதிபதி நிதியத்தின் நோக்கங்கள்

i. வறுமைக்கு நிவாரணம் வழங்குதல்.
ii. கல்வி அல்லது அறிவை மேம்படுத்துதல்.
iii. சமயங்களை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குதல்.
iv. தேசத்திற்காக சேவையாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்குதல்.
v. சனாதிபதி மற்றும் நிர்வாகிகள் சபையின் கருத்துப்படி பொதுமக்களின் நலனுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, நிதியத்தின் நிர்வாகமும் முகாமைத்துவமும் கௌரவ சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர், கௌரவ சபாநாயகர், கௌரவ எதிர்க்கட்சித் தலைவர், சனாதிபதியின் செயலாளர் மற்றும் கௌரவ சனாதிபதியால் நியமிக்கப்படும் இரு உறுப்பினர்களை உள்ளடக்கிய நிர்வாக சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சனாதிபதி நிதியத்திற்கான வருவாய், அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்து கிடைக்கும் வருமானம், வட்டி வருவாய் மற்றும் பல்வேறு தனிநபர் மற்றும் நிறுவன நன்கொடையாளர்களின் நன்கொடைகள் மூலம் பெறப்படுகிறது. **1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் 11(1)(ஆ) பிரிவின்படி**, அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்து சனாதிபதி நிதியத்திற்குக் கிடைக்கும் வருவாயின் ஒரு பகுதி **மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு** வழங்கப்படுகிறது.

நிதியத்தின் நோக்கங்களுக்கமைய, நிர்வாக சபையின் அனுமதியுடன் பல்வேறு நோய்களுக்கான மருத்துவ உதவிகள், வறுமை ஒழிப்பிற்கான நிதியுதவிகள், கல்வி மற்றும் அறிவு மேம்பாட்டிற்கான உதவிகள், சமய வடிக்கைகளுக்கான உதவிகள், தேசத்திற்காக சேவையாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்குதல், கௌரவ சனாதிபதி மற்றும் நிர்வாக சபையின் கருத்துப்படி பொதுமக்களின் நலனுக்கான செயற்பாடுகளுக்கான நிதியுதவிகள் மற்றும் நிர்வாக சபை தீர்மானிக்கும் விசேட திட்டங்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## பிரதான செயற்பாடுகள்

i. அடையாளம் காணப்பட்ட பல்வேறு நோய்களுக்கு மருத்துவ உதவி வழங்குதல்.
ii. வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சுயதொழில் உதவிகளை வழங்குதல்.
iii. தொழில் / சுயதொழிலில் ஈடுபட முடியாத குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்குதல்.
iv. கல்வி அல்லது அறிவை மேம்படுத்துவதற்காக பல்வேறு புலமைப்பரிசில் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
v. மத நிறுவனங்களின் நிர்மாணம் மற்றும் புனரமைப்பிற்கான உதவிகளை வழங்குதல்.
vi. வருடாந்த பெரஹரா நிகழ்வுகளுக்கான நிதியுதவி வழங்குதல்.
vii. தேசத்திற்காக சேவையாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்குதல்.
viii. சனாதிபதி அவர்கள் மற்றும் நிர்வாக சபையின் கருத்துப்படி பொதுமக்களின் நலனுக்கான செயற்பாடுகளுக்கான நிதியுதவி வழங்குதல்.
ix. சனாதிபதி நிதியத்தின் நிர்வாக சபையால் தீர்மானிக்கப்படும் ஏனைய விசேட திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

## நிறுவனக் கட்டமைப்பு




## முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

**2.1** அரசின் இலக்குகளை அடைவதற்காக 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் முன்னெடுக்கப்பட்ட கொள்கைகள்

**2.1.1** புதிய அரசின் டிஜிட்டல்மயமாக்கல் கொள்கைக்கு அமைவாக சனாதிபதி நிதியத்தின் சேவைகளை டிஜிட்டல் மயமாக்கி, நிகழ்நிலை முறைமையை (e-Service System) அறிமுகப்படுத்துதல்.

**2.1.2** அதன்படி, 2025 சனவரி 28 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதி நிதியத்தின் 65வது நிர்வாக சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, சனாதிபதி நிதியத்தின் மருத்துவ உதவி சேவைகளை பிரதேச செலகங்கள் வரை பரவலாக்கல் 2025.02.07ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டதுடன் மருத்துவ உதவி அல்லாத சேவைகள் 2026.06.21 ஆம் திகதி அன்று பிரதேச செயலகங்கள் வரை பரவலாக்கப்பட்டன.

**2.1.3** சனாதிபதி நிதியத்தின் செயல்பாடுகள் மற்றும் நிகழ்நிலை முறையின் கீழான செயல்பாடு தொடர்பாக நாடு முழுவதும் உள்ளடங்கும் வகையில் அனைத்து மாவட்ட செயலாளர்கள், பிரதேசச் செயலாளர்கள், கணக்காளர்கள் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் இணையவழியாகவும் மாகாண மட்டத்திலும் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. தற்போது சனாதிபதி நிதியத்திற்கு நேரடியாக வருகை தரும் பொதுமக்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளதுடன், பிரதேச மட்டத்தில் கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

**2.1.4** பல தசாப்தங்களாக கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கிய சனாதிபதி நிதியத்தின் சேவைகள், பொதுமக்களின் வசதிக்காக நாடு முழுவதும் உள்ள **341 பிரதேச செயலகங்கள் வரை பரவலாக்கப்பட்டுள்ளன.**

**2.1.5** 2023 (2024) மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற **2,960 மாணவர்களுக்கு** சனாதிபதி நிதியத்தின் மூலம் பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**2.1.6** மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தேசிய செயலகத்துடன் இணைந்து மாற்றுத்திறனாளி சமூகத்தினருக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன.

**2.1.7** கல்வியில் யாரும் பின்னடைவை சந்திக்க கூடாது எனும் கொள்கையின் அடிப்படையில் தொடர்ச்சியான கல்வியை உறுதிப்படுத்தும் புலமைப்பரிசில் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- காட்டு யானைத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கல்வி பயிவும் மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்குதல்.
- வெளிநாடுகளில் திடீர் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் வெளிநாட்டு தொழிலாளர்களின் குடும்பங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்குதல்.
- மீன்பிடித் தொழிலின் போது ஏற்படும் எதிர்பாராத அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்குதல்.
- கண்டி மகய்யாவ கிராமத்தைச் சேர்ந்த குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் மாணவர்களுக்கான விசேட புலமைப்பரிசில் திட்டம்.

**2.1.8.** மாண்புமிகு சனாதிபதி மற்றும் நிர்வாக சபையின் கருத்துப்படி பொதுமக்களின் நலன் அல்லது நல்வாழ்விற்கான அளிப்புக்களை வழங்குதலின் கீழ் பல்வேறு கோரிக்கைகளுக்கான நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

**உதா**:- 1. பேருந்து விபத்துகளால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குதல் (கெரண்டியெல்ல, எல்ல, குளியாப்பிட்டிய).

2. பாணந்துறை விஜேவர்தன மகளிர் சிறுவர் இல்ல அபிவிருத்தித் திட்டம்.

## 2.2 அப்பணிகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் மூலம் கிடைக்கப்பெற்ற விசேட நலன்கள்

**2.2.1.** பணிகள் பரவாக்கப்படதன் விளைவாக, 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்கள் **59% அதிகரித்தன.** *(ஒரே ஆண்டில் பதிவான அதிகூடிய பெறுமதி)*

**2.2.2.** இதுவரை தலைநகரை மையமாகக் கொண்டிருந்த சனாதிபதி நிதியம் அனைத்து மாகாணங்களுக்கும் பரவலாக்கப்பட்டதன் மூலம், ஒவ்வொரு குடிமகனுக்கும் நிதியத்தை அணுகும் வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்டதுடன் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களில் **90% நிகழ்நிலை வழியாக** பெறப்பட்டன.

**2.2.3.** டிஜிட்டல் மயமாக்கலின் மூலம் சரியான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், **இரண்டு வாரங்களுக்கும் குறைவான காலத்தில்** பயனாளிகளுக்கு உதவிகளை வழங்க முடிந்தது.

**2.2.4.** 2025.01.01 முதல் 2025.12.31 வரை **ரூ. 886.4 மில்லியன்** மருத்துவ உதவியாக **4,045 நோயாளிகளுக்கு** வழங்கப்பட்டது. *(ஒரே ஆண்டில் பதிவான அதிகூடிய பெறுமதி)*

**2.2.5.** 2025.01.01 முதல் 2025.12.31 வரை வறுமை ஒழிப்பிற்காக **ரூ. 9.87 மில்லியன்** நிதி **146 பயனாளிகளுக்கு** வழங்கப்பட்டது. *(ஒரே ஆண்டில் பதிவான அதிகூடிய பெறுமதி)*

**2.2.6.** 2025.01.01 முதல் 2025.12.31 வரை **மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின்** மூலம் **62,022 மாணவர்களுக்கு ரூ. 3,094.65 மில்லியன்** வழங்கப்பட்டது. *(ஒரே ஆண்டில் பதிவான அதிகூடிய பெறுமதி)*

**2.2.7.** 2025.01.01 முதல் 2025.12.31 வரை கல்வி மற்றும் அறிவு மேம்பாட்டிற்காக **94,268 மாணவர்களுக்கு ரூ. 1,572.6 மில்லியன்** வழங்கப்பட்டது. *(ஒரே ஆண்டில் பதிவான அதிகூடிய பெறுமதி)*

**2.2.8.** 2025.01.01 முதல் 2025.12.31 வரை சமயங்களின் மேம்பாட்டிற்கான பங்களிப்பாக **45 மதஸ்தலங்களுக்கு ரூ. 17.1 மில்லியன்** வழங்கப்பட்டது. *(ஒரே ஆண்டில் பதிவான அதிகூடிய பெறுமதி)*

**2.2.9.** 2025.01.01 முதல் 2025.12.31 வரை சமூக நலனுக்காக **111 பயனாளிகளுக்கு ரூ. 64.5 மில்லியன்** வழங்கப்பட்டது. *(ஒரே ஆண்டில் பதிவான அதிகூடிய பெறுமதி)*

## 2.3 எதிர்நோக்கிய சவால்கள்

**2.3.1.** சனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக வழிகாட்டுதல்களைத் தயாரித்தல் மற்றும் நிதியத்தின் செயற்பாடுகளை வழிநடத்துவதற்கான பொறிமுறையை வலுப்படுத்துதல்.

## 2.4 2026 ஆம் ஆண்டிற்கும் எதிர்வரும் நடுத்தரகால சட்டகத்திற்குமான முன்னுரிமைகள்

**2.4.1.** மருத்துவ உதவிகள் வழங்கப்படக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கையை மேலும் விரிவுபடுத்துவதற்காக சுகாதார அமைச்சின் பரிந்துரைகளைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

**2.4.2.** தற்போது அறுவைச் சிகிச்சைகள் மற்றும் சிகிச்சைகளுக்காக வழங்கப்படும் நிதியுதவித் தொகைகளை அதிகரித்து, திருத்தப்பட்ட புதிய நிதியுதவித் தொகைகளுக்கான அனுமதியைப் பெறுதல்.

**2.4.3.** வைத்தியசாலைகளில் நிலவும் அறுவைச் சிகிச்சை நெரிசலைக் குறைப்பதற்காக, பணிநேரத்திற்குப் பின்னர் அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளும் மருத்துவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குதல் மற்றும் இத்திட்டத்தை நாடளாவிய ரீதியில் ஏனைய பிரதான வைத்தியசாலைகளுக்கும் விரிவுபடுத்துதல்.

